
# பிரேத பரிசோதனைகள்



அஸாத் எம் ஹனிபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேத பரிசோதனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸாத் எம் ஹனிபா

# பிரேத பரிசோதனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரேத பரிசோதனைகள்** • கவிதைகள் • ஆசிரியர் : அஸாத் எம் ஹனிபா
• © அஸாத் எம் ஹனிபா • முதல் பதிப்பு : 2016 ஜூலை
• வெளியீடு : எம்.எச்.எம்.அஸாத், 48/5A, ஆசிரி மாவத்தை, களுபோவில, தெஹிவளை
• பக்கங்கள் : xii + 119 • விலை : ரூபா 300.00

**PIRETHA PARISOTHANAIKAL** • Poems • Author : Azaath M Haniffa • ©Azaath M Haniffa • First edition : 2016 July • Published by M.H.M.Azaath, 48/5A, Asiri Mawatha, Kalubovila, Dehiwala.
Printed at AJ Prints (Pvt) Ltd, Dehiwala.

ISBN : 978-955-54758-1-5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோருக்கு

ஸீனத்

அத்தீக்

அயாஸ்

அலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில பரிசோதனை அறிக்கைகள்

இந்த நூலாசிரியர் டாக்டர் நந்தி, ஞானசேகரன், சதாசிவம், முருகானந்தன், ஜின்னா ஷரிபுத்தீன் ஆகியோரின் குழுமத்துக்குள் இணைந்து விட்டார்.

தனது பாடசாலை காலம் முதல் பல்கலைக்கழகம் வரையான காலங்களில், தான் வாழும் சமூகத்தில் அனுபவித்த பல நிகழ்ச்சிகளே நெஞ்சில் ஊறிய கவிதைகளாக பரிணமித்துள்ளன. அதிகார வர்க்கத்தின் ஆக்கிரமிப்பு, கெடுபிடிகள் எல்லாம் கவிதைகளாக மலர்ந்திருக்கின்றன. நெஞ்சின் ஆறாத வடுக்களின் சின்னங்களாகவும் யதார்த்தத்தின் வெளிப்பாடாகவும் இவரது கவிதைகள் உள்ளன.

- டாக்டர் தி. ஞானசேகரன்
பிரதம ஆசிரியர். ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை

மிகவும் ஆற்றல், செயல் திறன் கொண்டவர். எனது மிகச் சிறந்த மாணவர்களில் ஒருவர். இவரது எழுத்துக்கள் நிச்சயம் சமூக கலாசார மேம்பாட்டிற்கு வழி செய்யும். மருத்துவ பணியுடன் இலக்கியத்தையும் சிறப்பாக செய்து வருபவர்.
என்றென்றும் வளமுடன் வாழ வாழ்த்துகிறேன்.

- பேராசிரியர் டாக்டர் எம். எல். நஜிமுதீன்.
மருத்துவ பல்கலைக்கழகம், மலேசியா

எமது சமூகத்தின் நாடித்துடிப்பை அறிந்து எழுதும் கவிஞர். சமூக ஆதங்கத்தை கவிதையில் வடிக்கும் திறமையை பாராட்டுகிறேன். சமூக அவலங்களை இவரது கவிதைகளில் காணலாம். மிகவும் துணிச்சலுடன் தனது கவிதைகளை எழுதும் திறமைசாலி. இவரது கவிதைகள் மொழி மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது என் விருப்பமாகும். மேலும் வளர வாழ்த்துகிறேன்.

- காப்பியக்கோ டாக்டர் ஜின்னாஹ் ஷரீபுத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் சிறந்த கவிஞர்களில் ஒருவர். புரட்சிகர கவிதைகள் பலவற்றை வீச்சாகவும் வீரியமாகவும் எழுதி வருபவர். இவரது கவிதைகளின் சொல்லாட்சி சிறப்பானது. விசாலமான பார்வை கொண்டவர். நவமணி பத்திரிகை மூலம் வளர்ந்து உயர்ந்த கவிஞர்.
தொடர்ந்தும் எழுதி நல்ல பல படைப்புக்களை தர வேண்டும்.

**- காவ்யாபிமானி கலைவாதி கலீல்**
**நவமணி பத்திரிகை**

கிழக்கு மண்ணின் ஆற்றலை வெளிப்படுத்தும் விதமாக தனது வைத்திய துறையில் இருந்து கொண்டே இடைவிடாது இலக்கியம் செய்வதை பாராட்டுகிறேன்.
இலக்கிய பரம்பரையில் தோன்றிய கவிஞர். இவரின் எழுத்துக்கள் சமூக மாற்றத்திற்கான விடயங்களை கொண்டுள்ளன. பல வித்தியாசமான கவிதைகளை எழுதி வரும் இவரையும் இவரது கவிதைகளையும் நான் மிகவும் நேசிக்கிறேன்.

**- மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்**

வைத்தியர்கள் இலக்கியம் செய்து வருவது பாராட்டத்தக்கது. நல்ல பன்முக கவிதைகளை எழுதி வருபவர். இவர் உண்மையை வெளிப் படையாகவே மக்களுக்காக படைக்கும் படைப்பாளி. மருத்துவர் அஸாத் அவர்களின் கவிதைகளில் காதல் மனவலியை மக்களின் இன்னல்களை தான் வாழும் சமூகத்தின் உணர்வுகளை தனது கவிதைகள் மூலம் வெளிக்கொண்டு வரும் தைரியமான எழுத்தாளர்.

**- சிரேஷ்ட ஊடகவியளாளர் விசு கருணாநிதி**
**கவிப்பெட்டகம். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது வேலைப்பளுவுக்கு மத்தியில் தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருக்கும் ஒருவர். இவரின் காதல் கவிதைகள் முற்றிலும் வித்தியாசமானவை. அவற்றின் ஊடாகவும் தாம் வாழும் சமூகத்திற்கு நல்ல உணர்வு பூர்வமான கருத்துக்களை விதைக்கும் கவிஞன். மென்மேலும் சிறந்த பல படைப்புக்களை தர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

- கவிதாயினி பாத்திமா நளீரா
வீரகேசரி வார வெளியீடு

எழுத்தின் மூலம் ஆத்ம திருப்தி காணும் கவிஞர். சமூக எழுச்சி கவிதைகளை எழுதி வரும் இவர் சமூக ஆய்வாளரும் சமூக சேவையாளருமாவார். தனது வைத்திய பணிக்கு மேலதிகமாக எழுத்தின் மூலம் மருந்து கட்டும் எழுத்தாளர்.
பணிதொடர வாழ்த்துகள்.

- ஏ.பி.எம். அஸ்ஹர்
விமர்சகர், ஊடகவியளாளர்
தினகரன் வாரமஞ்சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது எழுத்து = மருந்து + மரணம்

வாழ்வின் ஒவ்வொரு சுவாச அசைவும் அவ்வாறே பிரபஞ்ச அணுக்கள் ஒவ்வொன்றும் கவிதை தான்! என்பதில் நான் மிகவும் நம்பிக்கை உள்ளவன். அதுதானே உண்மை. பாடசாலை காலத்திலிருந்தே அந்த மூச்சு என்னை கவிதைகளுடன் வாழ வைக்கிறது.

எனது கன்னி கவிதை தொகுதி 'ஆத்மாவின் புண்' இன்னும் ஆறி விட வில்லை. இந்த இரண்டாவது தொகுதியான 'பிரேத பரிசோதனைகள்' மூலம் இனவாதிகளால் மரணித்தவர்களின் ஆன்மாக்கள் சாந்தியடையட்டும்.

நாட்டில் சிறுபான்மை மக்களின் இருப்பை குழியில் போட்டு மூடிவிட்டு பெரும்பான்மையினர் என்று பெரிய அளவில் பட்டப்பகலில் அட்டூழியம் புரிபவர்களுக்கு எதிராக எனது கவிதைகள் பெரிய ஊசி போடும். இந்த தீவில் அரசியல் நடவடிக்கைகள் எல்லாமே இலட்சியம், இலக்குகள் மறந்து காலத்தை கடத்திக் கொண்டு போகின்றன. காலத்தை நம்பி அரசு மட்டுமல்ல எனது எழுத்துக்களும் உள்ளன.

இதிலுள்ள அனைத்து கவிதைகளும் ஏற்கனவே தேசிய பத்திரிகைகளில், சஞ்சிகைகளில், முகநூலில், எனது வலைப்பதிவில் வெளியானவை. என் எழுத்தை அங்கீகரித்தவர்களுக்கு, அவற்றை பிரசுரித்தவர்ககளுக்கு நீடித்த நலமான வாழ்வு அமையட்டும்.

என் சுவாசத்தை சீர்செய்ய எனக்கு ஆதரவு தரும் பெற்றோர், உறவினர்கள், அன்புள்ளங்கள் அனைவருக்கும் அத்துடன் இந்த நூலை அழகுற அச்சிட்ட ஏ. ஜே. அச்சகத்தாருக்கும் என்றென்றும் எனது மனமார்ந்த நன்றிகள்.

துணைவியார் ஸீனத் சிபானி, மகன்கள் அத்தீக், அயாஸ், அலி ஆகியோர் எப்போதும் என் ஆன்மாவில் உயிராக ஒட்டிக் கொண்டேயிருக்கிறார்கள்.

அஸாத் எம் ஹனிபா
0777718787
drazaath@gmail.com
drazaath@blogspot.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வழுக்காடும் சிலைகள் 01
- அகிலத்தின் அச்சாணி 03
- ஹலால் 06
- அந்த இரு மணித்தியாலங்கள் 09
- நானும் நாயும் 12
- திறந்த வெளிச்சிறை 15
- சிரேஷ்ட பிரஜை 17
- அக்னி பூத்த அளுத்கம 20
- கண்டுகொள்ளாதவள் 23
- விலாசம் தேடும் வியர்வை 25
- சாமத்துப் பேய்கள் 27
- ஆண்மை 29
- களிமண் வீடு 31
- விடை காணாத் தடைகள் 34
- சுயகௌரவம் 36
- நசல் பிடித்த மனது 37
- அவளோடு வளர்ந்தேன் 40
- மனித விம்பம் 42
- உள்ளாடைகள் 44
- அவள் பிழைப்பு 46
- முறிந்து போனேன் 48
- பாத்திமா பேசுகிறேன் 50
- சென்றவள் 53
- இல்லாத நான் 55
- கைதிகள் 58
- கண்டெடுக்கப்பட்டவள் 59
- சீமான் 60
- மூன்றாம் தர பிரஜைகள் 63
- தலை நகரம் 65
- நாத்தீகனின் கடவுள் 66




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விதியை வரைபவள் 68
- கடந்தவை 70
- மீட்டெடுக்கும் பாடல் 72
- புல்லின் புலம்பல் 74
- நன்றி 77
- வேலி பாயும் போலிகள் 78
- வெம்பி வெடிக்கிறது மனம் 80
- வலி தரும் காத்திருப்பு 84
- ஜனன தினம் 85
- விழுங்கிய பொழுதுகள் 88
- வெள்ளம் 89
- ஓடிப்போனவள் 90
- நிர்வாண தேசம் 91
- கண்கள் 92
- ரிஸானா நபீக் 93
- முழுமையாக பொழிகிறாள் 96
- ஒன்றுமில்லை 98
- எனது புனித இரவு 101
- நம்பாதீர்கள் 102
- பழைய பட்டாம் பூச்சி 104
- முகமற்றவன் 106
- பேருந்து பயணம் 107
- குமரிகள் 109
- தலைவன் 110
- ஊருக்கு ஊர் 112
- அங்கவீனச் சமூகம் 115
- இனவாதி 117
- பிரேத பரிசோதனைகள் 118




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்காடும் சிலைகள்

போதி மரத்தடி
கருங்கற்கள் கூட
இன்று பெருஞ்சிக்கலில்
சுட்டெரிக்கும் உஷ்ணம்

மென்மையான
அதன் நிழலில்
வன்முறையின் தலைமுறை
பெரும்பான்மை பெரியவரின்
அழுகிப்போன மனது - அது
மிகவும் சிறிது

சன்மார்க்க சங்கதிகள்
சின்னாபின்னமாகி
மத போதகர்கள்
தலைகால் புரியாமல்
பிழையான சுவட்டில்
பெரும் வேதனை தான்

கொட்டும் மழையில் நனைந்த
மொட்டைத் தலைகளின்
ஊரோடிக் காய்ச்சல்
தம்பி - இனி
நாம் கவனமாயிருப்போம்

"குளோனிங்" சர்ச்சையை போல்
இருட்டில்
குட்டிகள் போட்டு
முட்டி மோதும்
இனவாத இனப்பெருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நடுவீட்டினுள்
கல்லாய் வந்து
குந்தியிருக்கும்
எல்லையற்ற ஜனநாயகம்
நமது பதிகளின்
முதுகெலும்பு தண்டு என்பது
மரத்துண்டு பலகை தான்

சகா
நிலையான சிலைகள்
வந்திங்கு
வாய் திறந்து வாதாட வேண்டும்
நிம்மதியாக வாழும்
எம்மவரின் உயிருக்கு
உலை வைக்காதென்று

விகாரைகளுக்கு
வெள்ளை மை பூசுவதினால்
ஒட்டை விழுந்த
உயர்வானவர்களின் உள்ளங்கள்
பரிசுத்தமாகாது
ஏனெனில்-
இன்று
மன நிறைவுடன்
எல்லோருக்கும்
தாராளமாய்
தங்குதடையின்றி கிடைப்பது
இனவாதம் மட்டுமே

வீரகேசரி வாரவெளியீடு
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலத்தின் அச்சாணி

குருதி நீரில் உயிர் வளர்த்து
கருப்பைச் சுவரில்
நுகமாய்ப் புதைத்து வைத்து
உதிரத்தால் உணவளித்த
உத்தமி உனக்கு இன்று
சதிகார சந்ததிகளால்
சந்தி சிரிக்கும் சங்கதியாய்
சாகும் முன்பே சமாதிகள்
ஒவ்வொரு வீட்டிலும்

தன் வாழ்வையே
தியாகம் செய்யும்
வீரத் தாய்மாரின்
தொப்புள் கொடியின்
ஈரம் காயுமுன்னரே
சொத்துக்களைச் சுரண்ட
காத்துக்கிடக்கும்
சுயநலப் பிள்ளைகளின்
உள்ளங்கள் உலர்ந்து
வெடித்த கற்பாறைகள் என்பது
கறைபடிந்த
தொடர் கதைகள்

இளமையிலும்
முதுமையிலும்
பிள்ளைகளுக்கும்
பேரப்பிள்ளைகளுக்கும்
ஓய்வில்லாமல்
சேவகம் செய்யும்
சம்பளமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்காரப் பெற்றோருக்கு
வேதனை மட்டுமே
நித்தமும் வேதனமாய் கிடைக்கும்

தங்கமான தாயை
தொல்லையென நினைத்து
தன் வீட்டு
நாயை விட மோசமாக நடாத்தும்
வயதுக்கு வந்த சேய்கள் -
பயங்கரமான பேய்கள் தான்

தூக்கம் தொலைத்து
தம் பிள்ளைகளின்
உயர்ச்சிக்காக
எத்தனையோ நேர்ச்சைகள்
எத்தனையோ காணிக்கைகள்
வைத்தவளுக்கு
இவர்களின் இதயத்தின்
ஓரத்திலாவது
ஒரு சொட்டு இடமில்லை

முதியோர் இல்லத்தில்
இனி எஞ்சியுள்ள
நாட்கள் முழுவதும்
முனகிக் கிடந்து
சாந்தியடையாத ஆத்மாவாக
அடங்கிப் போகும் அன்னையர்
பிரேத அறைகளில்
அநாதைப் பிணமாக
அழுகிக் கிடந்து
அரச செலவில்
அடக்கம் செய்யப்படுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையே
உன்னை
என்னவென்று கவனிக்காத
"என்னை
மன்னித்துக் கொள்" என்று கூடக் கூறாத
பிறப்புக்களை
எண்ணெய் ஊற்றிக் கொளுத்துவோம்
ஏனெனில்
தாயின் காலடியில்
சுவர்க்கம் இருந்தாலும்
நவீன பிள்ளைகளின்
கைகளின் மேல்
நரகம் இருக்கிறது

(அன்னையர் தினத்தில்)
சுடர்ஒளி ஞாயிறு பத்திரிகை
2013.05.19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹலால்

உன்
மதவாதப் புயல் அடித்து
புண்ணாகிப் போனது
என் பலம் பொருந்திய புலம்

இறைவனின்
புனிதத்தின் பெயரால்
எமக்கு
ஆகுமாக்கப்பட்டவற்றை
நீ ஆகாது என்று
அட்டூழியம் புரிகிறாய்
உன்
முன் அனுமதியின்றி
நான் உண்பதற்கு
வாய் திறக்கக் கூடாது என்கிறாய்

உடலால்
உணர்வால்
உள்ளத்தால்
உயிரால்
பரிசுத்தமானவர்களுக்கு
தேடித் தேடி
சேற்றைப் பூசுகின்றாய்

இறை நம்பிக்கையிலும்
இங்கு வாழும்
வணங்கும் உரிமையிலும்
காலால் எட்டி உதைத்து
ஏறி மிதித்துக் கொண்டிருக்கின்றாய்
புலால் நாறும்
உன் மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பூச்சி
புழுக்கூட நெருங்காது

இனவாதத்தை
வானத்தின் மேலால் தூவியும்
பூமிக்கு கீழால் புதைத்தும்
எம்மை இழித்துக் கொண்டிரு
வறண்டு போன
தர்ம ராஜ்யத்தின் விழிப்புக்காக
எம் தனித்துவ அடையாளத்தை
அழித்துக் கொண்டிரு

பாவம் - தேசியம்
விடுதலை
சுயாதீனம் என்று வாங்கப் போன
நம் தலைவர்கள்
மீண்டும் மீண்டும்
இரு கைகளையும்
உற்சாகமாய் உயர்த்துவார்கள்
பெரியவரின் முதுகை
சொறிவதற்காக மட்டும்

கூட்டிக் கொடுப்பவர்கள்
நன்கு வாலை ஆட்டியும்
சுயமாக ஊட்டியும்
நாக்கால் நக்கியும்
பழகிப் போனார்கள்

அவர்களுக்கு
நன்கு தெரியும்
இந்த
அரசியல் அநாதைகளுக்கு
இனி இழப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுமில்லையென்று
கையில் பிடித்திருக்கும்
பச்ச உ_யிர்களைத் தவிர

வீரகேசரி வாரவெளியீடு
2013.02.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த இரு மணித்தியாலங்கள்

சூரியன் உச்சிக்கு
வர மறுத்த நேரம் - அது
கசப்பான கணப்பொழுது
நெஞ்சைப் பொசுக்கும்
நீங்காத நெருடல்
வடபுல மண்ணின்
பூர்வீகக்குடியை அடியோடு
இனத் துடைப்புச் செய்த
இழிவான நிகழ்வு!

அந்த கறுப்பு ஐப்பசியின்
முப்பதாம் திகதியில்
கோரப்பசி வேங்கையின்
வேட்டை வேட்கையால் - நாம்
வேற்று மனிதராய்
விரட்டியடிக்கப்பட்டு
காழ்ப்புணர்ச்சியால்
கருவறுக்கப்பட்ட
களங்கத்தை நினைத்து
என் பேனா முனையில்
இன்னும் கசிகிறது குருதி
ஈழக் கனவை
ஈடேற்றப் போராடி
எம்மவரை
வேரோடு அறுத்தெறிந்து
ஈவிரக்கமின்றி
திடீர் வாந்தியென வெளியேற்றி
வெற்றி பெற்ற மாயை உன்னிடம்

கைகளில் இருந்தவைகளுடன்
எம் கனாக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவழியே
தட்டிப் பறித்தாய்
ஈற்றிலே
நீ - புதிய அகதி
நான் - பழைய ஏதிலியென
சந்திகளில்
குந்தித் திரிகிறோம்

இரு தசாப்தங்களுக்கும் மேலாக
மீளாத்துயரில்
எமது மீள்குடியேற்றம்

வரம்பு மீறிய
வரலாற்று தவறு என்று
நீ வருந்தினாலும்
வரையறையற்ற வழுக்காக
வன்முறையின் வடுக்கள்
நீ கட்டவிழ்த்த
இனச்சுத்திகரிப்பின் கறையை
பறைசாற்றும் தடயங்கள்

நித்தமும் நிந்திக்கப்பட்டு
நிர்க்கதியாகிய நாம்
சமரின் சாம்பல்மேட்டிலிருந்து
எழுந்து நிற்க
புதியதொரு விதி செய்வோம்

மலினமான
மனித கேவலத்தை
மன்னித்த
எம் மனசுகளுக்கு
நீ செய்த எதையுமே
மறக்க முடியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும்
அண்ணா!
ஆறாத ரணமான
ஆயுதப் போராட்டத்திற்கு
முள்ளிவாய்க்காலில்
அவர்கள்
முற்றுப்புள்ளி வைத்த போது
முதன் முதலில்
கண்ணீர் விட்டழுதது
இந்த இரக்கமுள்ள
தம்பி தான்

(வடமாகாண முஸ்லிம் மக்கள் அனைவரும் பலவந்தமாக
1990.10.30இல் வெளியேற்றப்பட்டதன் நினைவாக)

நவமணி பத்திரிகை
2013.01.06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் நாயும்

அது
தனியாகத்தான் நின்றது
அதிகம் குரைக்கவில்லை
கடிக்காது என்ற
அதீத நம்பிக்கை என்னுள்
இருப்பினும்
அதன் கண்களில்
விஷர் நாயின்
வெறிக் குணம் தெரிந்தது
இருந்தும் -
அதனைக் கடந்து
நான்
முன்னே செல்வதாய்
உத்தேசித்தேன்

உயிரியல் கூர்ப்பின்
எனது உயர்வு நிலை
புகழ் நகல்
பட்டம் பதவி
அகங்காரம் அலங்காரம்
மூச்சு பேச்சு
எனது உரிமை வலிமை
அதற்கு
ஒரு பொருட்டு அல்ல
என்னை பூனையென்று
நினைத்ததுவோ

என்னைப்பற்றி விளங்கி
தெரிந்திருக்க வேண்டிய
அவசியம்
அதற்கில்லை போலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது காலடிகள்
நெருங்க நெருங்க
அது பின்வாங்குவதாயில்லை
நடு வீதியில்
வழி மறித்து
தளபதியாய் அசையாமல் நின்றது
திடீரென
முனகத் தொடங்கி
அதன் அயலவர்களையும்
அழைத்துக் கொண்டது
எனது முன்னோக்கிய
ஒவ்வொரு எட்டிற்கும்
விதம் விதமாக
ஒலியெழுப்பி
மரண எச்சரிக்கை விடுத்தது
திரும்பி
வந்த வழியாக அல்லது
வேறு பாதையால் போவென்று
விரட்டியது

தற்பாதுகாப்பிற்காகவா
பழி வாங்கவா
ஒன்றும் புரியவில்லை

நாய்கள் ஒன்று கூடி
என்னை நோக்கி
பாதயாத்திரை வர ஆரம்பித்தன

குரைக்கின்றன நாய்களும்
இனிமேல் கடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன ஆயுதமேந்திய
இராணுவ வீரனை
கல்லால் தாக்கும்
பலஸ்த்தீன் சிறுவனைப்போல்
தேடிப் பார்த்தேன்
கல்லைக் காணவில்லை
பூர்வீக மண்ணையும் தான்

தினமும்
என் கனவில்
காவி நிறக்கண்கள் கொண்ட
அந்த நாய் தான்

தினகரன் வாரமஞ்சரி
2013.01.13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த வெளிச்சிறை

இருப்பின் இடுப்பை
உடைத்து விட்டு
எழுப்பி விட
தங்க ஊன்றுகோல்கள்

அடியடியாக இருந்த
அடையாளத்தின் ஆணிவேரை
அறுத்தெறிந்து விட்டு
அரவணைக்கும்
அரசியல் அங்கவீனர்களின்
ஊனக் கைகள்

எமது
பெண்களின் சேலைகளை
உருவிக் கழற்றி
எம் கண்களை கட்டி
வாய்களை பொத்திய
படைபலம் உன்னிடம்
உலகமே உன்னிடம்
தோற்றுப் போகும்

உடைகளை உரித்தெடுத்து விட்டு
உரிமை பற்றி பேசுவதற்கு
வட்ட மேசையில்
உட்காரச் சென்னாய்

பூக்களை காம்புடன்
புதைத்து
வெறும் கற்பனையில்
கற்பாறையில் நீரூற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் வளர்ப்பதாய்
ஏமாற்றினாய்

ஒட்டுமொத்தமாய்
காவுகொடுத்து
அடக்கம் செய்யப்பட்ட
கல்லறைகளை
தீவெங்கும்
தேடியலைகிறேன்

பறவைகள் பறக்காத
சிசுக்கள் பிறக்காத
வானவில் சிகப்பாகிய
தேசத்தில்
சுவாசிக்கக்கூட முடியாதுள்ளது
காற்றிலும்
இனவாத விஷம்
கலந்திருக்கிறார்கள்

குளிரூட்டிய அறைகளில்
அடுத்த தலைமுறையை
அடகு வைக்கும்
அரைகுறை முடிவுகளின்
நிறைவாக
இந்த
திறந்த வெளிச்சிறையில்
எமது பிறையும்
ஒரு குற்றம்
சுமத்தப்படாத கைதி

விடிவெள்ளி பத்திரிகை
2012.10.18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட பிரஜை

உறவுகளின் முதிர்வில்
அதன் முறிவில்
மறந்து போய்
மறைக்கப்பட்டுள்ள நான்
ஒரு சுவடுகள் உள்ள கிழடு

காலவரையின்றி
முதியோர் இல்லத்தின்
காற்றுப் புகாத
கற்சுவர் அறையினுள்
முடங்கிக் கிடக்கிறேன்
ஆயுட் கைதியாய்

என் முகத்தில்
மொய்க்கும் ஈயைக்கூட
விரட்ட முடியாத
கவலைமிகு நிலைமை

பிள்ளைகளை பெற்றெடுத்து
தினமும்
என் முதுகில்
உப்பு மூட்டை சுமந்த
பாவத்திற்கான தண்டனையாய்
தண்டவாளத்தின் மீது
வைத்த தலை - என் கதை

பலசரக்குக் கடையின்
பட்டியலாய் நீண்டு போகும்
வகை வகையான பிணிகள்
அணிகலன்களாய் அலங்கரிக்கும்
இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதரவான அப்பாவை

என்
படுக்கையறையும்
கழிவறையும் ஒன்றாகிப் போன
இந்த வயோதிபர் இல்லத்தின்
பணியாளர்களுக்கு - நானொரு
சாக வேண்டிய
சனியன் இன்று

நீ அழகழகாய் பெயர்
சூட்டியழைக்கும்
உன் வீட்டின்
நாய்க்குட்டிக்குக் கூட
சொகுசான கொட்டிலும்
மூவேளை ஆகாரமும் என்று
கேள்விப்பட்டேன்

என்
இறுதிச் சடங்குக்கு
வராது விட்டாலும் - அதனை
நடாத்த கூலிக்கு
மலிவான மலர்ச்சாலை
தேடி வைத்துக்கொள்
அத்துடன்
கலர்ப் படத்துடன்
கண்ணீர் அஞ்சலி விளம்பரம்
பிரசுரித்து
நீ - வெளிநாட்டில்
இருப்பதை
ஊரிலுள்ள உறவுகளுக்கு
சொல்லி வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கடைக்குள்
சாகத்துடித்துக் கொண்டிருந்தாலும்
உங்கள் பிறப்பு
அத்தாட்சி பத்திரத்தில்
என்றும் நறுமணம்
வீசிக் கொண்டேயிருப்பேன்

அனைத்துமே
அற்றுப் போனாலும்
அரசின் பார்வையில்
நானுமொரு
சிரேஷ்ட பிரஜை தான்

தினகரன் வாரமஞ்சரி
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்னி பூத்த அளுத்கம

அநாகரிக அவர்களின் ஆவி
அளுத்தகம நகரை முகாமிட்டது
'மரக்கலயா'
'பறையா'
'தம்பிலா' என்று - அங்கே
அடிக்கடி ஒலித்தது

அவர்களின் திட்டப்படி
அனைவரும் ஒன்றுகூடி
கூட்டம் போட்டு
அப்பாவிகளான
எம்மை கூறு போடுவதாக
சபதம் செய்தனர்
தலைமை பௌத்த தேரர்
எம்மை உயிருடன் கொளுத்தி
பூண்டோடு அழிப்பதாக
மார்பில் அடித்து இடித்து
கூச்சல் இட்டார்

முஸ்லிம் சமூகத்திற்கு
இன்றுடன்
முற்றுப்புள்ளி என்றார்
சிங்கள காவல்படை
உள்ளதாகவும்
உரக்கக் கத்தினார்

அவற்றையெல்லாம்
அளுத்தகம நகர்
அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தது
அவ்வாறே
பொலிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினரும்
அமைதியாக வேடிக்கை
பார்த்துக் கொண்டிருந்தனர்

முதலில் அடித்தார்கள்
அதன்பின்
ஆண்களை
பள்ளிவாசல் மௌலவிகளை
கைது செய்து வேறுவேறாக
அழைத்துச் சென்றனர்
பெண்களை
விரட்டிவிரட்டி துரத்தினர்
பின்னர்
தாக்குவோருக்கு வசதியாக
காவல்துறை
ஊரடங்கை பிரகடனப்படுத்தினர்

சொத்துக்களை சூறையாடி
அவர்களின்
பௌத்த இயக்கத்தை
வளர்க்க முடியுமானவரை
தலையில் சுமந்து சென்றனர்
எங்கள்
வாகனங்கள் வீட்டுடன்
சேர்ந்து சாம்பலானது
நள்ளிரவில்
காவல்துறை பாதுகாப்பில்
காடையர்களின்
துப்பாக்கி குண்டுகள்
எம்மவர்களின் உயிருடன்
பந்து விளையாடின
பக்கத்து ஊர்களும்
கொலைக்களமாயின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்சலைகளின்
கதவுகளை மூடிவிட்டு
பாசிசத்தின் வாரிசுகள்
பள்ளிகளுக்குள் பாய்ந்து வந்தனர்

விழுந்ததும்
எல்லாம் முடிந்து விட்டது
அப்போது
விகாரையின் மணி அடிக்கப்பட்டது

முதலில் மதகுருக்கள்
அவர்களின் அடியாட்களுடன்
எங்கள் குடியிருப்புக்களை விட்டு
வெற்றிக் களிப்புடன் வெளியேறினர்
அதனை தொடர்ந்து
பொலிஸார் பின்னால் சென்றனர்

அடுத்த நாள் காலையில்
நாங்கள்
ஊடகங்களில்
எங்கள் வீரத்தை காட்டினோம்

பாவம்
அநாதையாக அளுத்தகம நகர்
என்னுடன் சேர்ந்து அழுதது

பேரினவாதத்தின் அடுத்த கல்
எங்கு விழுமோ
தலைவர்களின்
தலை கவனம் காக்கா

வலைப்பூ
2014.06.15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டு கொள்ளாதவள்

பொறுத்திரு
பொறுத்திரு என்று
என்னை
பெருமையுடன்
பொறுமை காக்க வைத்து
உன் இதயக்கதவை
இழுத்து மூடி விட்டாய்
வேறு யாரிடமோ
கழுத்தை நீட்டுவதற்காய்

என்
உணர்வுகளை
உயிருடன் வெட்டிப் போட்டு
கை காட்டிச் சென்றாய்
கடைசி வரைக்கும்
நிழல் கூட இல்லாமல்
காணாமல் போவதாய்

எனக்கு
உலகமே நீயான பிறகு
அரிதாய் வலம் வரும்
நீல நிலா போல்
என் வானில்
வந்து செல்ல
நீயொன்றும்
அன்னியவளாகயிருக்கவில்லை
என்
ஒவ்வொரு உட்சுவாசத்திலும்
காற்றோடு நீ
ஒட்டி ஒழிந்திருப்பது
செயற்கையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலைச் சுவாசிக்கும்
உனக்கு விளங்காது

இதய இழையங்களில்
கொடியெனப் படர்ந்திருக்கும்
தசை நார்கள்
நாளையும் சொல்லும்
என் உடலின்
உயிராகவும்
என் ஜீவனின்
உடலாகவும்
நீயே இருப்பாய் என்று

என் தோலில்
வேர்விட்ட ரோமங்கள்
ஒவ்வொன்றிலும்
உன்
ஞாபகங்கள்
பூக்களாய் மலர்ந்திருக்கும்

இருப்பினும் -
பனிக்கட்டிக்குள்
தீப்பிளம்பு வைத்து
பிழைப்பு நடாத்தும்
பெண்களை
நீ என்னை
கண்டு கொள்ளாதவரை
நான்
ஒருபோதும் கண்டிருக்கவில்லை!

தினக்குரல் ஞாயிறு பத்திரிகை
2013.06.02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலாசம் தேடும் வியர்வை

உரிமைகளை
ஓங்கிக் கேட்டு
தூக்கிலிடப்பட்ட வரலாறு
கறுப்பு தினமாக
செம்மே எனும்
நெருப்பு எரிகிறது
தணலில் தகிக்கும்
எம்மவர் உடலில்
கேலிச் சித்திரம்
வரைகிறது அரசு

தொடர்ந்தும் தோல்வியில்
பிழியப்படும் தொழிலாளர்
எட்டாவது வானத்திற்கும் அப்பால்
ஏறி நிற்கும் விலைவாசி
தேய்ந்துபோன வேதனம்
பதினோராவது
பரிமாணங்களாய்
வேதனைகள்

ஊர்வலங்களும்
கோஷங்களும்
கொண்டாட்ட கூட்டங்களும்
மீண்டும் வேதாளம்
முருங்கை மரத்தில்
அரைகுறை துண்டுடன்
தட்டுகளை
ஏந்தியவாறு
நாம்
சாலை ஓரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்ப் புகையில்
தொலைந்த கனவுகள்
இராணுவம்
இரும்பு வேலிகள் போட்டு
விரட்டிவிரட்டி துரத்தியடித்த
போராட்ட உணர்வுகள்
விழுந்த தோழர்களின்
உடல்களுக்கு
இங்கே எத்தனை
சிலைகள் வைத்துள்ளார்கள்

அடுத்த
அதற்கு அடுத்த
ஆண்டிலும்
தொழிலாளர் வர்க்கம்
ஆட்சியாளர்களின்
அடக்குமுறைக் கூண்டுக்குள்ளேயே
கழுத்து நெரிக்கப்பட்டு
விமோசனமின்றி
முனகிக் கொண்டு
முகம் குப்புறப் படுக்கும்

(மே தினம்)
வீரகேசரி பத்திரிகை
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமத்துப் பேய்கள்

உதிராத பொழுதுகளின்
உறங்காத உணர்வுகள்
உதிரத்தை உறைய வைக்கும்
அது
என் இதயவறையை
நிறைய வைக்கும்

பிரிவின் அதிர்வில்
வெடித்துப்போன
என் மனப்பரப்பில்
மாடிக்கட்டடம்
மண்ணில் புதைந்தது போல்
திடீரென நீ
மறைந்து போனாய்

இதயப் பெட்டகத்துள்
பூட்டி வைத்த உன்னை
வெற்றிட விலாசத்தில்
எங்கே தேடுவது

புதைக்கப்பட்ட
என் உடலை
மீண்டும் தோண்டி
எடுத்து விட்டு
இந்த உலகம் சொல்லட்டும்
நீ எனக்கு
ஏமாற்றத்தை தவிர
வேறொன்றையும்
ஊட்டவில்லை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிடம்
சரணடைந்த பின் தான்
தெரிந்து கொண்டேன்
இன்னும் கொஞ்சம்
உன்னோடு
போராடி இருக்கலாம் என்று
வேறு ஒருத்தியின்
மீட்சிக்காகவாவது

இப்படித்தான் நாம்
மோகினிப் பிசாசுகளாகவும்
சாமத்துப் பேய்களாகவும்
நாளை
உலாவிக் கொண்டிருப்போம்

வீரகேசரி வாரவெளியீடு
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்மை

விழுதுகளாகவிருந்த
விழுமியங்கள்- இன்று
வேர்களற்ற
மனிதக் கட்டைகளாய்
வீதிகள் எங்கும்
விழுந்து கிடக்கின்றன

சிறுமிகளை சிதைத்து
வனிதயரை வதைத்து - இரத்த
உறவுகளை உதைத்து
வில்லங்கம் விதைத்து
அனாச்சாரங்கள்
அன்றாடம் அறுவடை

அச்சத்தில் மிஞ்சிய
பிஞ்சுகள் கொஞ்சம்
கெஞ்சிக் கேட்டன -
புத்தகப்பைகள்
சுமக்கும் வயதில்
பிள்ளை சுமக்க
வைக்க வேண்டாமென்று

காலம் காறித்துப்பும்
காம வெறியால்
நாடி புடைத்து
விறைத்து
நாடெங்கும் நாற்றமெடுக்கும்
கிழிந்து தொங்கும்
கச்சைகளாய்
அழிந்து போகும்
ஆணின் இச்சைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரமான கோரப்பிடியில்
நொறுங்கிக் கசங்கிய
மொட்டுக்களின்
கெட்டுப்போன எதிர்காலம்

கோழைகளின்
முறுக்கேறிய குருதியும்
வியர்வை சொட்டும்
முணுமுணுப்பும்
ஆண்டவனை மறந்த
ஆடவரை
ஆயுட்கைதியாய் மாற்றும்

முடிந்தவுடன்
வெற்றியுடன்
எழுந்து நிற்கும்
வெறி கொண்ட
மாமிச மிருகத்திற்கு தெரியாது
விடிந்தவுடன்
குடிபோதை முறிந்து
தன் குடி
முழுகிப் போகுமென்று

இளைஞனே
செவ்வாயிலும் - நீ
இனி இந்திரியத்தால்
இதிகாசம் செய்வாய்
யாரேனும் ஒருத்தியை
மானபங்கப்படுத்தி விட்டு

தினகரன் வாரமஞ்சரி
2012.09.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களிமண் வீடு

முட்டைக் கோதுகளாய்
உடைந்து நொருங்கும்
முத்தான குடும்பங்கள்
பொய்யான வாழ்க்கைத் திரையின்
மெய் விம்பங்கள்

ஒரே கருப்பைத் தலையணையில்
சுகமாய் உறங்கிய நுகங்கள்
ஒரே வீட்டினுள்
ஓடி விளையாடிய
உடன் பிறப்புக்கள்
வழக்குகள் பல
வாதாடிப் போராடி
ஆதிக் குடிமனையை கூறுபோட
முட்டி மோதி
வெட்டிக் கொள்வர்

பரம்பரைச் சொத்தைப் பிரிக்க
செத்துப் போகும் வரை
பம்பரமாய்
தலைமாட்டில்
ஒரு கூட்டம் வக்கீலுடன்

எதுவுமே சேர்த்து வைக்காத
பெற்றோரையும்
உற்றாரையும்
நடைபாதையிலே விட்டுவிட்டு
சிலர்
தலைதெறிக்க ஓட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிப் பறித்து
கிடைத்ததை சுருட்டிக் கொண்டு
நாயும் கறிச்சட்டியுமாய்
நாறிக் கொண்டிருக்கும்
நமது நவநாகரீகம்

செல்வம்
பெருமை
பொறாமையென
விஷமேறி பழிதீர்க்கும்
விழி கெட்டு வழி தவறிய
வழித் தோன்றல்கள்
சிறுதொகைப் பணம் வேண்டி
சினம் கொண்டு
பார்வையாலேயே
படுகொலை செய்யும்
பகைவராயினர்

சுனாமியாய் மாமியாரும்
தலைகீழாய் மருமகளும்
இடைநடுவே
ஓட்டை விழுந்த ஓடமாய்
ஆடவர்கள் அனைவரும்
மூழ்கிப் போவர்

சிறுகாணித் துண்டுக்காக
கால்களைத் தறித்து
கழுத்தறுக்கப்பட்டு
தலை துண்டிக்கப்பட்ட
இரத்த உறவுகள்

ஊத்தை நகத்தை விடுத்து
விரல்களை பெரிய பரிசாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டியெறியும்
கொடூரமாய்
உருமாறிப்போன வாரிசுகள்

குப்பைத் தொட்டியில்
கசக்கி எறியப்பட்ட
வெற்றுக் கடதாசியாய்
புனிதமான மனிதநேயம்

கரைந்து இடிந்து போகும்
இந்த களிமண் வீடான -
சிதைந்து உக்கிப் போகும்
சதை நார்களால் மூடப்பட்டிருக்கும்
எலும்புக்கூட்டை
தோள்களில் வைத்து
தூக்கிச் சென்று
அடக்கம் செய்யும்வரை
அடங்கவே மாட்டார்கள்
இந்த அசிங்கமானவர்கள்

தினகரன் வாரமஞ்சரி
2012.11.25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை காணாத் தடைகள்

உணர்வுகளையும்
உயிர்களையும்
துடிதுடிக்கச் சாகடித்து
புதைகுழிகளின் மேல் நின்று
விடுதலைப் போராட்டம்
செய்வதாய்க் கூறி
என் புறமுதுகில் குத்தி
சுதந்திரதாகம் தீர்த்தாய்

நான்
துரத்தியடிக்கப்பட்டு
ஓடி வந்த
சதியும் பீதியும்
நிறைந்த நரகப் பாதையை
திரும்பிப் பார்க்கிறேன்
வலியால்
மூட மறுக்கும்
கண்ணீர் விழிகள்

ஈவிரக்கமற்ற
ஈரம் காயாத
இரத்த வாடை
மயான பூமி எங்கும்

ரணமான இதயவறை
துடிக்கிறது
இந்த
அரசியல் அநாதையின்
அகதி முகாமில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்
தொப்புள்கொடி
புதைக்கப்பட்ட மண்
தோண்டப்படுகின்றது
அதில்
நான் மீள்குடியேற
மறுப்பதன் மூடுமந்திரத்தை
ஏன் - நீ
மறைத்து வைத்துள்ளாய்

ஆனாலும் நீ
வாய் கிழியக் கூறுவாய்
உனக்கும்
எனக்கும்
ஒரே தாய் -
ஒரே தாய்மொழியென்று

விடிவெள்ளி பத்திரிகை
2012.09.20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயகௌரவம்

பெரிய ஐயாவுக்கு
தேசியம் என்பது
தேசிக்காய் பண்டம்
சுயநிர்ணயம் என்பது
வாழைக்காய் சுண்டல்
எங்கள்
இருப்பிற்கான போராட்டம்
என்றதும் எல்லாமே கிண்டல்

கொல்வதற்கு முன்
ஒன்றை மட்டும்
விளங்கிக் கொள்
இங்கு தான்
நான் பிறந்தேன்
முடிவாக
இங்கே தான் மடிவேன்
இந்த நிலம்
உனக்கு மட்டுமே என்று
சொல்லாதே
எமது
உரிமையை கிள்ளாதே !

வலைப்பதிவு
2014.02.04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நசல் பிடித்த மனது

என்னை சந்திக்கும்
ஒவ்வொருவரின்
உள்ளத்திலும்
ஒரு நரகம் உண்டு
என்னிடமும் தான்

சிக்கலான குழப்பம்
சில பொழுதுகளில்
நரக வேதனை
முறைப்பாடுகளாய் வெளிப்படுகின்றன

அவர்கள் அனைவரும்
வித்தியாசமான
குற்றவியல் பிராணிகள்
நான் மேற்கொண்ட
பரிசோதனை அறிக்கையில்

அவர்களிடம்
முன் தயாரிக்கப்பட்ட
பதில்கள் மட்டுமே உள்ளன
நான் வினாக்களுடன்
வாழ பழகிக் கொண்டவன்
என்னிடம்
தண்டனை பற்றி
விளக்கம் கேட்கிறார்கள்

எல்லோருக்கும்
என் ஆதரவு
வேண்டுமென்றவர்கள்
என்னை இன்று
தேசத்துரோகி என்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அருந்தும்
மருந்தை எழுதும்
என்னை விடவும்
மருந்தை மட்டுமே
நம்பி வருகிறார்கள்
ஆனாலும்
நான் ஆண்டவனை
மட்டுமே நம்புகிறேன்
என்னை
கடவுள் என்றவர்கள்
இப்போதெல்லாம்
என்னை
பிசாசுகளின் பிதா
என்கிறார்கள்

எழுத்தின் ஆடை
கழற்றியவர்களுக்கும்
அந்தரங்கம்
கௌரவம்
சுயமரியாதை உள்ளதென்று
மதிக்கிறேன்
அவர்கள்
நானோ அம்மணமாக
இருப்பதாக கூறுகிறார்கள்

எல்லோருக்கும்
நோய் அவ்வப்போது
மட்டும் வருவதுண்டு
அவர்களுக்கு
அவர்களது ஆத்மாவே
நோய்க் கிருமியானது
அது ஆச்சரியமன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானொன்றும்
சுவர்க்கத்தின் மரநிழலில்
குந்தியிருந்தியிருந்து கொண்டு
அவர்களை
குற்றம் சாட்டவில்லை

வலைப்பூ
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளோடு வளர்ந்தேன்

இன்னொரு நாள்
மற்றொரு நாள்
அவளின் புன்னகையின்றி
கடந்து செல்கிறது
எவ்வளவோ
துயரமுள்ள அர்த்தம்
என்னிடம் இருக்க
வேண்டுமென்று தெரியும்

பழகுவதற்கு
கையில் பொய் எழுதி
இதழில் இரகசியம் இணைத்து
செலவிட்ட நேரம்
வியர்வையாய்
இடைவெளி
அதிகரித்துச்சென்ற சந்தேகங்கள்

மிக மோசமாக
பாதிக்கப்படும் போது
கண்களை பார்த்து
அவளுக்காக
செய்யும் எல்லாவற்றையும்
பகிர்ந்து கொண்டேன்

அவளுக்கு பாரமாகி
நான் இனி
விரும்பினாலும்
அவள்
தாரமாகி
தூரமாகி
ஆயிரம் மைல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாக ஆபத்தாக
ஆச்சரியமாகவும் இருக்கிறது
உயிர்ப்பான உறவு - அது
மிகவும் வலுவானது
அவளின் முடிவைப்போல

நடந்தவை
கடந்தவை
மிகவும் கெட்டவை
மறக்க முடியாத
மடிப்புக்கள் உள்ள
படுக்கை விரிப்புக்களால்
முகத்தை
மட்டும் மூடிக்கொண்ட
கனவுகள் வந்து போகலாம்

அவளை
அவளது பலத்தை
எனக்கு நன்கு தெரியும்

வலைப்பூ
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விம்பம்

கனவின் குருதியோட்டத்தை
ஒரு முறையாவது
மாற்றம் செய்ய
வாழ்நாள் முழுவதையும்
அவள் இதயத்தில்
அடகு வைத்து
மரணத்தை அனுபவிக்கிறார்கள்

உண்மையான
ஒரு வித்தியாசம்
அது சரியானதாக இருக்கும்
அவர்களின்
இரசானய மாற்றத்தை
முகநூலில் உணர்கிறேன்

மனதில் வீசும்
எனக்கு பிடித்த
இந்த காற்று
அவர்களின் சுவாசம் அல்ல
அது மாசடைந்த
காதல் வலி கவிவரிகள்

தெருக்கள் நிறைய
சாப்பாடு கேட்கும்
யாசகக் குழந்தைகள்
அந்த மலடர்களுக்கு
மனக்குருடு

உடைந்த ஆத்மாவை
உதடுகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கொருவர்
ஒட்டிக் கொள்கிறார்கள்

கண்ணாடியில் கூட
இடமில்லை என்கிறார்கள்
அதில் தெரிவது
விம்பம் அல்ல
விகாரமடைந்த
அவர்களின் மனது

சுயநலத்திற்காக
கழுவப்பட்ட கனவு கூட
தெளிவானதாக இருக்க முடியாது

கண்ணாடி - நீ
நீயாக இரு
மனிதனை நம்பாதே
மனிதா - உன்
கண்கள் உன்னை
ஏமாற்றும்

வலைத்தளம்
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளாடைகள்

எங்கள் உடை
ஒழுக்கம் பற்றி
பேசுவதற்கு முன்
அவர்கள் அணிந்திருக்கும்
காவிநிற முகமூடி பற்றி
விளக்கமளிக்கட்டும்

அவர்களின் நிர்வாணத்தை
மறந்து விட்டு
எமது உள்ளாடைகள் பற்றி
மாநாடு நடாத்துவதை
நிறுத்திக் கொள்ளட்டும்

காற்றிடம் காரணம்
கேட்டுக் கொள்கிறேன்
அவர்களுக்கு நான்
என்ன துரோகம்
செய்து விட்டேன் என்று

கண்ணாடியில் பார்த்தாவது
திருந்த தொடங்கட்டும்
அன்றில் - அவர்கள்
வழிகளை மாற்றிக் கொள்ளட்டும்

எந்த செய்தியும்
தெளிவானதாக இல்லை
விரும்பினால் முதலில்
உங்களை பாருங்கள்
எங்களை
மாற்றம் செய்யமுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மனதை
நீங்கள் மூடியதை போல்
எங்கள் மூளையை
மூடிவிட முடியாது
ஓட்டையான உள்ளாடைகளை
வீசியெறிந்து
நல்லெண்ணம் காட்டுங்கள்
இல்லையென்றால்
உங்களை நீங்களே
தூக்கி எறியுங்கள்

உனக்கு தெரியும்
நிறுத்த வேண்டும் என்று

வா - நான் வெகுதூரம்
செல்ல வேண்டியிருக்கிறது

வலைப்பதிவு
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் பிழைப்பு

சுற்றிப் போடப்பட்ட காவல்
அதன் பாதுகாப்பை கற்பழித்தது
இரவு வாழ்க்கையில்
காவல்துறை கொடூரமாய்
அவள் பயிரை மேய்ந்தது
வானத்தை நோக்கி
மரியாதை வேட்டுக்கள்
வீரமாய் நிறைவேற்றப்பட்டன
நீரில் மூழ்கிய தோட்டாக்கள்

அவர்களை
நானும் வெறுக்கிறேன்

எல்லோரும் அவளை
பலாத்காரமாக அடைந்து
பாவச் சுமையால்
பைத்தியமாகினர்

கட்டில்
தரை விரிப்பு
கச்சைகள் என
எல்லாவற்றையும்
கழுவி உலரப் போட்டனர்

உதைத்து அடித்து
அவளை முறித்து
உடைத்தனர்
என்ன சுகமோ

அதிகாரிகளுக்கு
அவமானம் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலை இல்லை
நீதியை ஒருபோதும்
நான் நம்பவில்லை

அவள் செய்திகளை
பார்க்க படிக்க விரும்பவில்லை

தோல் நிறத்தை
பருத்த மார்புகளை
தேடி அலைகிறார்கள்
எல்லோரும்
மோசமாகி விட்டார்கள்
வெட்ட வெளியில்
நிர்வாண நாயின் புணர்ச்சி
பரவாயில்லை

உண்மையில் கவலை
அந்த ஆசாமிகள் பற்றியே
அவளைப் பற்றியல்ல

அவர் அவருக்கு
செய்யும் தொழில்
தெய்வம் என்பதை
நம்ப முடியுமா?

வலைப்பதிவு
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிந்து போனேன்

அவள் தொட்டுத்தொட்டு
விட்டுச் சென்ற - என்
வாழ்க்கை கெட்டு
நரம்பு அறுந்து
உடம்பு உடைந்து
இதயம் இடிந்து
விழுந்து கிடக்கிறது

எப்படியென்று தெரியாது
ஏன் என்றும் புரியவில்லை

காற்று சுமந்து வரும்
அவள் முழு உடலையும்
என் கடலில் கழுவி
பாவங்களை
போக்கிக் கொள்ளட்டும்

அவளின்
ஏக்கப் பார்வை
கண்கள் செய்த குற்றம் என்று
என்னால்
கடக்க முடியவில்லை
இன்று நுகர முடியாத
பரிசுத்தமான வஸ்து அவள்

உணரப்படாத அவஸ்த்தைகள்
என்னை
கல்லறை குழியில்
சரித்து விட்டன
பெண்ணுக்காக வீழ்கிற
எனக்கு என்ன வந்ததென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் தெரியாது

நான் உருவமற்று
வானவர்களோடு இருக்கிறேன்
வெறுமையை உங்களால்
பார்க்க முடியாது

அவள் பற்றிய
கனவுகளுடன்
எனக்கு சதா
அம்மணக் குளியல்

வலைப்பதிவு
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத்திமா பேசுகிறேன்

கருவறையில் நான்
மிதந்து கொண்டிருக்கும் போதே
எனக்கு விருத்தசேதனம்
செய்து சிதைப்பதாய்
ராத்தாமாரும்
அக்காமாரும்
அகர ஆயுதமேந்தி
ஆர்ப்பாட்டம் -
வீதியெங்கும் மாதவிலக்கு

பெண்ணியம் பேசுபவர்கள்
தொப்புள்கொடியால்
என்
கழுத்தை நெருக்கி
கொல்கிறார்கள்

எனது பருவவயது
மாதவிடாய் நாட்கள்
திருமணம்
மறுமணம் என்று
எல்லாமே
எல்லோரும் பேசுகிறார்கள்
என்னைத் தவிர

நான் மலர்ந்து கிடக்கிறேன்
பெரிய புள்ளையாகி
கட்டிப் போடும்
சட்டங்கள் என்று
நவீன பெண்ணியம் பேசுபவர்கள்
மல்லாந்து கிடக்கிறார்கள்
பாதையோரங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நானே
மணப்பெண் என்று வாழ்த்துகிறேன்
என்னை யாரும்
நிர்ப்பந்திக்க வேண்டாம்
எனக்காக நீங்கள்
யாரும்
கையெழுத்து வைத்து
எழுதிக் கொடுக்க வேண்டிய நிலை
மாற வேண்டுமா
அது பற்றி
என்னை
எதுவும் கேட்காதீர்கள்
எத்தனை பேருக்கு
என்னை பங்கிடுவதென்று
அவர்கள் கூறட்டும்

காட்டுச் சட்டம்
நாட்டுச் சட்டம்
நாறிக் கிடக்கிறது
பதினாறு வயதிலிருந்து
விருப்பத்திற்கேற்ப
படுத்து கொள்ளலாம்
ஆனால் பதின்னெட்டு வயது
வரும் வரை திருமணம்
செய்து கொள்ள விட மாட்டோம்
என்கிறது சட்டப் புத்தகம்

எனக்கு முடியும் என்ற வயதில்
நான் கழுத்தை நீட்டி
செய்து கொள்ள முடியும்
நவீன பெண் உரிமை
சட்டத்தின் கீழ் சங்கிலி போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமைப்படுத்தி
சிறைப்படுத்த வேண்டாம்

முடிந்தால்
எனக்கு வேறு மார்க்கம்
ஒன்றை காட்டுங்கள்
அதை பின்பற்றி
உல்லாசமாக வாழ்வதற்கு
என்னை
என் எண்ணத்தை
என் எதிர்பார்ப்பை
என் எதிர்காலத்தை சுற்றி
மூடியுள்ளவற்றை
கழற்றி வீசியெறிந்து விட்டு
ஓடி வருகிறேன் சகோதரா

வலைப்பதிவு
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்றவள்

அவளது
பிரபஞ்சம் விசாலமானது
ஆயிரம் வார்த்தைகளை
என்னால் சொல்ல முடியும்
அது பற்றி

நீண்ட காலமாக
தன்னந்தனியாக
அவளின் பால்வீதியில்
நடந்து சென்றது போல் தெரிகிறது
வியர்வை துளி உலர்ந்த
அவளது
சூடான வெளிச்சுவாசத்தை
மறந்து விட்டு

சுவர்க்கம் பற்றி
மிகவும் விசித்திரமாக
அவள் வரைந்த சித்திரம்
எனக்கு
நினைவிருக்கிறது
ஒரு வேளை
நான் மிகவும்
குருடானாக இருக்கலாம்

சில பெண்கள் மட்டுமே
அவளுக்கு
மாற்றம்
தேவையென்று சொன்னார்கள்

வெளியே
திருப்பி விடுவதற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் திரும்பி விட்டேன்
நரகக் குழி வழியை கண்டுபிடித்து

இப்போது
தியானத்தில் இருக்கின்றேன்
அவளது
ஆத்மாவின் மனதை
அடைய வேண்டும்

வலுவான மனதுடைய எனக்கும்
பைத்தியம் பிடிக்க வேண்டும் என்று
சைத்தான்கள்
பிரார்த்தனை செய்யட்டும்

உண்மையின்
முகத்தைத் தொடுவதற்கு
விரும்புகிறேன்
நீங்கள்
எல்லோரும்
உலக அரங்கை விட்டு
சொல்லாமல்
போய் விடுவதற்குள்

வலைப்பூ
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லாத நான்

எனது ஊரில்
ஒரு கதிரைவாசியை
உருவாக்கியிருக்கிறேன்
ஊழல் புழுக்கள் வெளியே
தெறித்துச் செல்கின்றன

மீண்டும் நினைக்கிறேன்
மண் புழுவை மதிப்பதாக
யாரும் யோசிப்பதாக
திரும்பி
பார்ப்பதாகக்கூட இல்லை

அவரால்
நஞ்சாகி நறுக்கப்பட்ட
சமூகத்தின் கல்லீரல்
எனது ஊர்

குடிப்பதும்
படிப்பதும்
எனது பட்டினத்தின்
குருதியை விற்று
வாங்கிய
காரசாரமான
மதுபானம் கலந்த திரவம்
இதயத்தை விரைவாக இயக்கும்
ஆனாலும்
வெகுசீக்கிரம் களைத்து
நின்று போகும்

மருத்துவமனையில்
அதிர்ச்சியடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்த போது
நான் ஒத்துழைத்து
சுவாசம் கொடுத்தேன்

அவரிடம்
விவாதத்தைத் தடுக்க
நீண்ட காலத்திற்கு
பதவியிலிருந்து
மக்களுக்கு சேவை செய்ய
வேண்டும் என்றேன்

இஸ்லாமியர் பிரச்சினை
அவரது இதய பிரச்சனை போலவே
சிக்கலாக உள்ளது
என்னை நானே பார்க்க
அனுமதிக்க மாட்டேன் என்றார்

கதை மிகவும்
கனமாக இருப்பதற்கு
வழக்குகளை தீர்த்துக் கொண்டு
உதடுகளில் மூழ்குங்கள்

உங்களை ஏமாற்றினேன்
இருப்பினும்
எல்லோரும்
என்னைப் பின்பற்றுகிறார்கள்
இந்தக் கதிரை
எனக்கு சவக்குழி போல
தோன்றுகிறது என்கிறார் இன்று

கதிரை
வெறுமையை உணர்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு
ஒரு சிறிய சர்ச்சை தேவை
தயாராக இருங்கள்

எனது ஊர் பெற்றெடுத்த
ஊமைப் போராளிகளே

வலைப்பூ
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகள்

கைதிகளையும்
இனவாத நஞ்சு
விட்டு வைக்கவில்லை

தமிழ்
முஸ்லிம் கைதிகள் -
பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்
ஒருபோதும்
பிணை இல்லை
சிறைக்கூடங்கள் தான்
அவர்களின் கல்லறைகள்

சிங்கள கைதிகளை
சிறப்பதிதிகளாய்
அரசியல் கைதிகளாய்
பிரித்து வை
விரைவாக
விடுதலை கிடைக்கும்
பொது மன்னிப்பும் கூட
தருவார்கள்
சிங்களவர்களை மட்டும்
வேறாக நடாத்தும்
நாட்டின் சிறைச்சாலைகள்
என்ன
பன்சலையில் நடக்கும்
பௌத்த அறநெறி பாடசாலைகளா?
சொல்லடா
அடிமை சிறுபான்மையே!

வலைப்பூ
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டெடுக்கப்பட்டவள்

உன்னை
அழகுச் சிற்பமாக வடித்த
உன் தலையெழுத்தைப் போல்
உன் கையெழுத்து
முத்துக்களாய் முகவரி தந்துள்ளது
எழுத்துக்களால்
சிங்களத்தியே
என் வர்ணமான
நினைவுகளுக்கு
கரி பூசிக் கொண்டிருக்கின்றாய்
நான்- என்
உணர்வுகளை மதிக்க
கற்றுக் கொண்டேன்
உன்னிடம் இருந்து

வலைப்பதிவு
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமான்

மறைந்தும் மறையாத
எம் நினைவை விட்டும் நீங்காத
சேர் எனும் சரித்திர நாயகனை
வகுப்பறைகளில் தேடுகின்றோம்
ஏன் விரைந்து
வாழ்க்கை பாடத்தை
முடித்துச் சென்றாய்
எம்மை
தனிமை
வெளியில் விட்டுவிட்டு

கல்வியெனும் வான்வெளியில்
தேய்பிறை காணாத நிறைமதி
தன்னலம் பாராது
பணி செய்த -
பனித்துளி போல்
தூய்மையானவர் நீங்கள்
தராதரம் பாராமல்
அகரம் புகட்டி
அன்பால் புடம் போட்டு
அறிவின் சிகரம்
தொட வைத்த ஆசான்
உங்களுக்கு சிரம் தாழ்த்தி
நிற்கிறது இங்கே
பல மாணவ தலைமுறைகள்
வளர்ச்சிப் படிகள்
பல தாண்டிட எம்மை - உன்
அனுபவத் தோள்களில்
சுமந்து சென்றாய்
மெழுகுவர்த்தி போல்
உருகி உருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் நலத்திற்காக போதித்து -
வெளிச்சம் போட்டு
முன்னேற்றப் பாதைகள் பல
காட்டிக் கொடுத்தாய்

அறிவுச்சுடர் ஏற்றி
அறியாமை இருள் அகற்றி
எம்மை காப்பாற்றிய
கடவுளுக்கு
முந்திய குரு நீங்கள்
இன்முகத்துடன்
உன்
அனுபவத்தை
ஆயுள் முழுவதும்
எம் அடிமனதில்
ஆழப் பதித்து
விட்டுச் சென்றாய்
புண்பாடாத
உனது
அடக்கமான பண்பாட்டால்
பல தலைமுறைகள் இங்கே
உனக்கு
உள்ளங்களில் சிலை வைத்துள்ளனர்
பல மேதைகள்
உன் தூய்மையான
வகுப்பறை எனும்
கருவறையில் தான்
உருவானார்கள்

பல வலிகளையும்
பூமி போல
தாங்கிக் கொண்டாய்
எமக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுபெற்ற பின்னரும்
ஓயாத உன் உயரிய
உன்னத சேவையை
தேடிக் கொண்டேயிருகின்றது
இந்த மாணவ சமூகம்
எங்கள்
ஒவ்வொருவரின்
உயர்வும்
உன் நாமம் சொல்லும்
உன் சேவை
ஓர்நாள்
உலகை வெல்லும்
ஆதலினால் -
மதி தந்த பதியை தினமும்
ஓதி ஓதித் துதிக்கின்றோம்
ஈமானுள்ள சீமான்
என் பாசமிகு ஆசான்

(உலக ஆசிரியர் தினத்தில்)
முகநூல் சுவர்
2015.10.06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் தர பிரஜைகள்

பள்ளிகள் பல உண்டு
உண்மையில்
அங்கு தொழுவதை தான்
அவர்கள்
தடுக்கிறார்கள்
இல்லை - பள்ளிகளையும்
தகர்க்கிறார்கள்

பொலிஸ்
அரச அதிகாரம்
நீதிமன்றம் ஊடாக
பள்ளிகளை மூடி வைத்துள்ளது
சிங்கள பௌத்த
தீவிரவாதத்தின் ஜனநாயகம்

பாங்கோசை ஒலிப்பதை
நீதிமன்றத்தில்
தடை செய்து விட்டு
அதே நேரத்தில்
பன்சலையிலிருந்து
பௌத்த துதி இசை
பாளி பாஷையில்
அதிகாலையில்
ஒலி பரப்பப்படுகிறது
ஒலி மாசடைவதற்கு
பள்ளிகள் மட்டுமே
காரணமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள்
ஒருபோதும்
உங்கள் மதத்திற்கு
மாறப் போவதில்லை

எனது வலைத்தளம்
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைநகரம்

கற்குகைகளால்
இந்த தலைநகரம்
தலை நிமிர்ந்து நிற்கிறது
யாருக்காவது
பெருமைப்பட முடியுமா
மனித தலைகளை
தறித்து விட்டு
என்னை சுற்றி
வானுயர எழுந்துநிற்கும்
கட்டடங்களின்
படிக்கட்டுகளில் ஏறி
இனி
விண்வெளி சென்று விடலாம்
ஒரு மரத்தைக்கூட
காணவில்லை மருந்துக்கும்

மனதில் படர்ந்துள்ள
பச்சை புல்வெளிகூட
நடைபாதையாக மாறிவிட்டது
இது குறித்து
வாகனங்களில் வரும்
தொழிற்சாலை மிருகங்களுடன்
நேருக்குநேர் பேச முடியாது

மக்கள் வாழும் இயந்திர நகர்
இங்கு வாழ்ந்து தான்
எம்மவர்கள் பெரும்பெரும்
அரசியல்வாதிகளாய் மாறினர்

வலைப்பூ
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாத்தீகனின் கடவுள்

யாரென்று தன்னையறியாதவன்
எப்படி இறைவனை
அறிய முயற்சி செய்வான்
அதை நானறியேன்

அவர்கள்
இல்லையென்று மறுப்பதென்றால்
அவர்களின் இறைவன்
ஏற்கனவே
இருந்திருக்க வேண்டும் அல்லவா

பகுத்தறிவு மேதைகள்
கடைசியில்
மருத்துவர்களை மட்டுமே
நம்பியிருக்கிறார்கள்
மருத்துவர்கள்
எப்போதும்
கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள்

புத்த பெருமான்
அன்னை தெரேசா
அவர்களை கூட
சிலர் கடவுள் என்கிறார்கள்

அரசியல் தலைவர்களுக்கு
விளையாட்டு வீரர்களுக்கு
சினிமா கவர்ச்சி நடிகைகளுக்கு
என்று எல்லோருக்கும்
பித்து பிடித்தவர்கள் உண்டு
பக்தர்கள்
யாருக்குத்தான் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் என்றழைக்கப்படும்
குழந்தைகள் கூட
பெற்றோரின் பக்தர்கள் தான்

போலிச் சாமியாரை
சுற்றி வட்டமிட்டு
கடவுள் இல்லை என்று கூறுபவர்கள்
அதிகாலையிருந்து
தவம் கிடக்கிறார்கள்

அந்தச் சாமியார்
குப்பி விளக்கின்
கும்மிருட்டில்
நிர்வாணமாக நிற்கின்றார்
அவரின் ஆணுறுப்பை
பார்த்துக் கொண்டே
பிள்ளை இல்லாத பெண்கள்
அவரின் பாதங்களை
தொட்டு கழுவிக் குடிக்கிறார்கள்

கடவுள் இல்லை என்பவருக்கு
கக்கா உருட்டும்
கருவண்டுக்கு
கருவறையில் மிதக்கும்
சிசுவுக்கு
ஆகாயத்தின் பறக்கும்
நிலத்தடியில் கிடக்கும்
அனைத்துக்கும்
உணவளிப்பது
அந்த ஆண்டவனே

வலைப்பூ
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியை வரைபவள்

உன் மீது படியும்
பனியாக நான்
வடிந்து ஒழுகும்
தேனாக நீ

உன் மௌன மொழியாக
நீ பார்க்கும் ஒளியாக
உன்னில் நுழையும்
வளியாக நானிருக்க
என் நாக்கின் சுவையாக
பேச்சின் இசையாக
இதயத் தசையின் அசைவாக
நீயிருப்பாய்

உனக்கு
போர்வையாகவும்
உனது பார்வையாகவும்
நான் மட்டுமே இருப்பேன்
எனக்கு நிழலாகவும்
நிஜமாகவும் நீயே
என்னோடிருக்க வேண்டும்

கூந்தல் முடியிலும்
உன் வெற்றிக்கொடியிலும்
இவன் இருப்பான்
எனது உயர்வின் படியாகவும்
இறுதி முடிவாகவும்
நீ இருக்கவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன வலிதந்தவளே
மற்றவர் பழிகேட்டு
மரணிக்காதிருக்க
ஒரு வழி சொல்லடி

வலைப்பூ
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவை

இது சந்தேகமற்ற
இயற்கை மரணத்தின்
உப்புச் சப்பில்லாத
சவப் பரிசோதனை

மயிர் கொட்டிய வழுக்கைபோல்
நடந்து முடிந்தவை
நிரந்திரமாய் மடிந்து விட்டன
பழையவற்றையே
நினைத்து நினைத்து
நிம்மதியிழப்பது
கொடிய தீராத நோய்தான்
நல்லவைகள் பல இருந்தாலும்
நன்றி மறந்த மனதில்
துன்பதுயரங்கள் மட்டுமே
வந்து வாட்டும்

சுரந்த பால்முலையினுள்
வடிந்த கண்ணீர் விழிகளுக்குள்
பிறந்த பிள்ளை கருப்பைக்குள்
மீண்டும் அவை
வந்த இடம் செல்லாத போது
நாம் மட்டும் ஏன்
பழைய நினைவுகளிடம்
மீள வேண்டும்

கடந்து விட்டவை
கெட்ட கனவுகள்
அது பேய்பிசாசுகளின் தரிப்பிடம்
முடிந்த கதைகளை விட்டுவிட்டு
விடிந்த பொழுதை விதைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதிகளில்
அமைதியாக உறங்குவோரை
அசிங்கமாக அலச வேண்டாம்
கல்லறைகளில் கணகாலமாக
தூங்குவோரை எழுப்பி
கல் எறிந்தே
நாம் எரிந்து போகின்றோம்

இறந்த காலம்
உயிர் பிரியும் போது
ஜனித்த சிசு இந்த நிகழ்காலம்
இனி இருப்பதை காப்போம்
எதிர்காலத்தையும்
ஒரு கை பார்ப்போம்

வீரகேசரி வாரவெளியீடு
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்டெடுக்கும் பாடல்

எத்தனையோ தடவைகள்
மற்றவர்களுக்கு
ஞானத்தின் ஏணியாகவும்
வாழ்வின் படியாகவும்
நீ உள்ள போது
என்னால்
கரம் பிடித்து
கரை சேர முடியாமல் போனது

பிந்திய சாமத்து
கனவின் சிறகுகளில்
உன் நினைவுகளை
சுமந்தபடி
வானத்தின் தட்டுகளில் ஏறி
நிலவிடம் உன்னை
நலமாக ஒப்படைத்து விட்டு
காதலின் வதனத்தை
சுவாசித்தவாறே
ஒவ்வொரு நொடியும்
ஆகாயத்தில்
வலம் வருகிறேன்
அது அழகிகள் மட்டுமே
இருக்க வேண்டிய இடம்

இதயத்தசை பிழிந்து
வடியும் உன் மன வலிக்கு
என்னிடம்
மருந்துகள் கேட்டாய்
நோய் என்று ஒன்றுமில்லை
நீ வாழ வேண்டும்
சாதனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல படைக்க வேண்டும்
முடியும் வரை என்றேன்
ஆனால் இன்று
என்னை
நீ உனது
நோயாளியாக்கி விட்டாய்
உன்னிடம் அப்படியொரு
மெல்லச் சாகடிக்கும்
வசீகரமான வைரஸ்

ஹோர்மோன்களின் வலி
தந்தவளே
உயிர் என்றால்
என்னவென்று இப்போது
விளங்கிக் கொண்டேன்

எதற்காகவும்
யாருக்காகவும்
இனி விட்டுவிடப் போவதில்லை
ஆணாதிக்கத்தின்
ஆறாத ரணத்திலிந்து
உன்னை மீட்டெடுக்கும் வரை
பொறுத்துக் கொள்
தயாராயிரு தங்கமே
நிச்சயமாக நான் வருவேன்

வலைப்பூ
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லின் புலம்பல்

இறை இல்லமும்
உறைவிடமும்
தொலைந்து போன
தீவொன்றின் வரைபடத்தில்
அடர்ந்த வனாந்திரத்தின்
அடியில் படர்ந்திருக்கும்
அரைகுறை புதர்கள்
உதவாத உதிரிகளென்று
காட்டின் ராஜா கர்ச்சித்தது

உயர்ந்து நிற்கும்
பலமான ஆல மர நிழலால்
நித்தமும்
மூடி வைக்கப்பட்டுள்ள
எம்மை யாரும்
கண்டு கொள்வதாயில்லை

பெரிய மரமொன்றை
சுற்றிப்பற்றியுள்ள
கொடியென வர்ணித்த ஒருவர்
விளக்கமளிக்க முன்பே
தன் தவறை
விளங்கிக் கொள்ளாமல்
மரணித்துப்போனார்

புல்பூண்டு செடிக்கு
எதற்கு - பாதுகாப்பு வேலியென்று
கேலி செய்து
தடி எடுத்தவர்களெல்லாம்
குடி பெயர் கேட்டு
தண்டித்து மிரட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை விரட்டுகின்றனர்

நேற்றைய மழைக்கு
முளைத்த களான்கள் என்று
நசுக்குபவர்கள்
மழை நீரையும்
பிழை என்கின்றனர்

உன் காடு தீப்பிடித்து
எரியும் போது
கால் முளைத்த
புல்லை மட்டும்
பொல்லால்
சுடு சொல்லால் அடித்து
நீ - கொல் என்று
சொல்வது எதற்காக

ஊர் ஊராய்
பூர்வீக மண்ணுக்குள்
வேர்விட்டு ஆதியான எங்களை
அழித்து விடுவதால்
உன் வீடு
காடு
நாடு எதுவுமே செழிக்காது

முடவனும் எம்மை
எட்டி உதைத்து விட்டு
செல்லும் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயத்தை நோக்கிய
உனது உமிழ்வில்
அமிழ்ந்து
நிர்மூலமாவது வானமல்ல
உன்
முகம் மட்டும் தான்

தினகரன் வாரமஞ்சரி
2012.12.23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

மாய வாழ்வின்
மோகத்தில் மூழ்கி
தாய் தந்தையரை
கோபித்துக் கொண்டு
ஆகாயத்தில் பறந்தாலும்
நன்றி மறந்தாலும்
இறந்தாலும்

அந்த வெளிநாட்டு
நாய்க் குட்டிகளுக்கு
ஏன் இன்னும்
வால் முளைக்கவில்லை
ஆட்டுவதற்கு

வலைப்பூ
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலி பாயும் போலிகள்

களங்காத ஓடையில்
விளங்காமல் குளிக்கும்
நிலவை
அத்தாங்கு வைத்து களவாக
அள்ள நினைப்பாய்

ஓலைக் குடிசைக்குள்
நட்சத்திர ஒளியற்ற நிசியில்
கும்மிருட்டில்
குப்பி விளக்கொளியில்
அவள்
ஊசியின் காதினுள்
உலகைச் செலுத்துவாய்

நெருங்க முடியாத
மானமுள்ள பெண்ணிற்கு
மருதானி போல்
சாணி பூசி
அசிங்கம் செய்வாய் - அவள்
தாலியை அறுத்து
இரும்புச் சங்கிலியிட்டு
ஊரின் வாய்க்கு
ஆமைப் பூட்டும் போடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதினுள் யாரோ
கதைப்பதாய்
கண்ணெதிரே யாரோ
நிற்பதாய்
மூக்கில் ஏதோ
மணப்பதாய்
மாயக் கதைகள் கூறுவாய்

போகின்ற
வருகின்ற பேரூந்தில்
ஓடிச் சென்று
ஏறிச் செல்வாய்
அடுத்த தரிப்பிடம் இறங்கி
மீண்டும்
மலத்தை மிதிப்பாய்

தினகரன் வாரமஞ்சரி
2014.02.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெம்பி வெடிக்கிறது மனம்

ஆல மரமொன்று
காலை வாரிவிட்டு
தலை விரிகோலமாய்
நடந்து போகிறது

இது தான்
தலைவிதியா

கேவலத்தால்
எமது
ஓலமிடும் மனது
வெம்பி வெடிக்கிறது
அந்த மரத்தைபோல்

அதன் விழுதுகள்
எம்மை
தூக்கிலிட்டுச் சாகடித்து
தற்கொலையென தீர்ப்பளித்து
தப்பித்துக் கொள்ளும்

இலையுதிர்த்து
இடறிவிழும் பொழுதெல்லாம்
காட்டிக் கொடுக்கும்
கோடாரிக் காம்புகள் என்று
காற்றுடன்
வீரவசனம் பேசுவாய்

தரம் கெட்டு
சோரம் போனவர்கள்
கூட்டத்தின்
குதூகலிக்கும் கோட்டைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவோடு இரவாக
தாவிக் கொண்டது
குரங்குகள் மட்டுமல்ல
மரமும் சேர்ந்து தான்
முகவரி தொலைந்த
எமது
சமூகத்தின் பிடரியில்
விருட்சம் வீழ்ந்து
அகால மரணமான
அடிப்படை அபிலாஷைகள்

எமது
அரசியல் விஞ்ஞானிகள்
மரத்தடி நிழலில்
மந்திரம் செய்து
இந்த அப்பாவி
அறிவிலிகளை
சங்கிலியில் இட்டனர்
கொத்தடிமைகளாய்

கை வீசித்திரியும்
சில்லறைத் தனமான
மொத்த வியாபாரிகள்
ஆதிவாசிகளின்
பூர்வீக பூமியையும்
சேர்த்து விலைபேசி
கை விரித்து விட்டனர்

நாம் மரநிழலில்
கிடக்கும்
பிச்சைப் பாத்திரம்
கொச்சையான சரித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம் பெற்ற மரமொன்று
மனதிற்கும்
மண்ணிற்கும்
பெரும் பாரமென்று
வரலாறு
வன் சொல் கூறித் திரியும்
காறித் துப்பும்

மரத்திலிருந்து
வீழ்ந்து விட்டோம்
இனிமேல்
பேரினவாத மாடுகள் வரும்
சப்பாத்துக் கால்களால்
ஏறி மிதித்து
மாண்டு போவதற்கு

பட்டைகள் கழன்று
பட்டுப்போன
உன் மீது காற்று வாங்க
காகம்கூட உட்காராது

நீ - எமக்கு
சந்தனக் கட்டையுமல்ல
கொள்ளித் துண்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சால்வை பெரியவரின்
பல் இடுக்கில்
எச்சிலில் தோய்ந்து
அவர் விரும்பம் கேட்டு
சொல்படி செயலாற்றும்
பல் குத்தியாய்
வாழ்ந்து கொள்

விடிவெள்ளி பத்திரிகை
2012.11.08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி தரும் காத்திருப்பு

என்
குடியிருப்பின் முகவரி
வானுயரப் பறந்து
இடம்மாறிப் போனது

கடுகதியான
கணப் பொழுதுகள்
என்னிடம்
முடவனாய்
அவள் - பிரிவின்
வரைவிலக்கணம் கூறும்

அவஸ்த்தையின்
அவத்தைகள்
என்
மூச்சிக்குழல் மூடியில்
ஒட்டியிருக்கும்

உன்
தலையணை மடியின்
உஷ்ணத்தில் தான்
இன்னும்
உறங்கிக் கொண்டிருக்கிறேன்
நீ
இங்கு வந்து
தங்கமே என்னை
தட்டி எழுப்பிவிடு

வலைப்பூ
2012.12.22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனன தினம்

கேலிக் கூத்தடித்துக்
கொண்டிருக்க நேரமில்லை
சகோதரா

கொடியவர்கள்
எங்கள் இருப்பிடங்களை
இடித்துத் தள்ளி
விரட்டியடித்ததால்
தலைநகரின்
கொம்பனித்தெருவில் - இனி
வெள்ளைப் பிறை பொறித்த
பச்சைக்கொடிகள் பறக்காது
நபிகளாரின் பிறந்த தின
கந்தூரி வைக்கும்
கலகலப்பும் கிடையாது

வெள்ளிக் கிழமைகளில்
ஏந்திய சுலோகங்களும்
எதிர்ப்புக் கோஷங்களும்
பதவிகளுக்காக
சலுகைகளுக்காய்
சலுவைத் தொழில் செய்யும்
எமது
செவிட்டு ஊமைகளுக்கு
கேட்கவில்லை
இவர்களை
எங்கள் மாணிக்க நபி
எப்படி மன்னிப்பார்
ஏந்தல் நபி வழியில்
தொழுது வணங்க
பட்டப்பகலில் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பள்ளிகளுக்கு
போக முடியாதிருக்கிறது
காவியுடை புடை சூழ
காக்கிச் சட்டையே
தொழும் இடத்தில்
கல்லெறிவதால்

அந்தக் கற்களில்
சில சிலைகளாக
நிற்கின்றன

மாநபியே
இம்முறை
எங்கள் வீட்டிலேயே
உங்களுக்கு விழா
எடுக்கின்றோம்

இது போதாது என்று
இன்னுமொரு கூட்டம்
எங்கள்
நபிகளாரை மதிப்பதாகக்
கூறிக் கொண்டு
உள்ளூர் வாசிகளின்
அடக்கஸ்தலங்களில்
மணக்குச்சிகள் கொளுத்தி
பகட்டான போர்வைகள் போர்த்தி
சுற்றி நின்று கும்பிட்டு
தொட்டுத் தொட்டு
தடவி கூத்தடிப்பதால்
அவமதிப்பு மட்டுமே
உங்கள்
பிறந்தநாள் வெகுமதியாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேலிக்கூத்தடித்துக்
கொண்டிருக்க நேரமில்லை

அவர்கள்
உன்னை அரச மரத்திலிருந்து
அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள்
எப்படி
இனப்பெருக்கம்
செய்வது என்று

விடிவெள்ளி பத்திரிகை
2014.01.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுங்கிய பொழுதுகள்

செத்துப் போகும்
கால மூச்சுக் கசிவில்
சிசுக்கள் பல்லாயிரம்
புதுப்பித்தாய்
பின்னர்
பல இலட்சம்
உயிர்களை
பிடிவாதமாய்
கண்டபடி
காவிக் கொண்டாய்

மனித மனங்களை
நினைவுகளால்
கொத்திக் காயப்படுத்திய
மனிதப் பேரழிவே
நீ போ!

உன்னைப் போலவே
தடம் பதிக்க மற்றுமொரு
யுத்தம் வரட்டும்

ஒரு கையில் செல்வம்
மறுகையில் நற்சுகம்
தலையில்
நிச்சயிக்கப்பட்ட மரணம்
தோள்களில்
துப்பாக்கிகளை சுமந்து கொண்டு

வலைப்பதிவு
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம்

வானத்தின் ஒழுக்கு
கிழக்கில் ஓர் அழுக்கு
செயற்கையின் கள்ளத்தனம்
அபிவிருத்தி வெள்ளமாய்
கொல்லும்

கள்ளமான அரசியல்
உயிரினத்தின் உள்ளம்
ஏமாற்றும்
மனிதநேயத்தின்
படுபள்ளம்

அந்த மழையின் பிழையா
அல்லது -
கைகள் தேடிய வினையா

பிச்சை சம்பளம் பெறும்
அவளின்
அகதி முகாமும்
அமிழ்ந்து போனது

பொல்லாத
வாக்குறுதி
அடைமழையே
இனி நீயுமா
எமக்கு தொடர் கவலை

முகநூல்
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடிப் போனவள்

உள உறவுகள்
வலியால்
துடிதுடித்து பிரியும்
அதில்
கிழிந்து தொங்கும்
இதயத் தசையிலிருந்து
சொட்டுச்சொட்டாய்
வடியும்
குருதித்துளியில் உருவாகும்
துன்பப் பிரளயம்

உதறித் தள்ளிய
பெற்றோரின்
விழி நீர்
கண்ட காதலர்கள்
பித்துப் பிடித்து
சேராமல்
சோரம்போய்
செத்துப் போகட்டும்
ஒரு
துன்பியல் காப்பியமாக
அல்லது
ஒரு
துரோக காவியமாக

வலைப்பதிவு
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வாண தேசம்

சிங்கள பேரினவாத
வெறியின்
இறுதகைப்பு பொறியில்
சிக்கியுள்ள
காட்டிக் கொடுப்பவர்கள்
கூட்டிக் கொடுப்பவர்கள்
வயிறு வளர்ப்பவர்கள்
சோரம்போய் -
தன்மானம் கெட்டவர்கள்
சுயநல
அரசியல் கோமாளிகள் --
இந்த
முஸ்லிம் தேசத்தை
சிறை வைத்துள்ளார்கள்

புறப்படுங்கள்
வாக்காளர்களே
எட்டப்பர்களை
கட்டிப் போடுவதற்கு

வலைப்பூ
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்கள்

அவளிடம் மட்டும்
எப்படி
இத்தனை வெளிச்சம்
என்
விழித்திரை எங்கும்
கும்மிருட்டு

அவள்
ஆத்மாவின் புண்
என்
கண்களை சிதைக்க
அவளைப் போலவே
என் கனவுகளும் வீண்

முகநூல் சுவர்
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஸானா நபீக்

பாவம் நீ - ரிஸானா
அநியாயமாக உன்னை
பலி கொடுத்து விட்டோம்
என்ன விலை கொடுத்தாவது
எண்ணெய் நிலத்திலிருந்து
உன்னை இங்கு
கொண்டு வருவதாகக் கூறி
விமானத்தில் ஏறி இறங்கி
உல்லாசமாய் சுற்றித் திரிந்த
பெருந்தகைகளும்
வீரியமற்ற பெரும் தலைகளும்
அறிக்கை அரசியல்வாதிகளும்
மீண்டும் அவர்களின்
இயலாமையை
மலட்டுத் தன்மையை
நிரூபித்துள்ளனர்
ஆனால்
பாவமடி நீ

நன்மையை மட்டுமே
சம்பாதித்து வைத்த
உனக்காக
எம்மால்
எந்த நன்மையும்
நடக்கவில்லை
கண்டன அறிக்கைகளையும்
அரசியல் பம்மாத்தையும் தவிர

ஆட்டைக் கடித்து
மாட்டைக் கடித்து
ஈற்றிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான - "ஷரீஆ" - வையுமா?
அந்தச் சட்டம் சரியா
அன்றில்
சவூதி அரேபியாவின்
சரித்திரத்தின் சரிவா
உன் பகுத்தறிவா
அருள் மறையின் பரிந்துரையா
இது
பரிதாபமா
பரிகாசமா

சந்திக்குச் சந்தி
பிரிந்து நின்று
பரிவு காட்டாத
சவூதியை சபிப்பது
எனக்கு இன்னும்
புரியாத புதிர் தான்

அரிவாள் வெட்டி வீழ்த்திய
உன் தலை
மண்ணில் விழுவதற்குள்
எரிந்து கருகியது
எம்மவர் மனது
சோகத்தால்
உறங்கிப் போனது உலகு

பொத்திப் பொத்தி வளர்த்த
முக்காடிட்ட சிலையின்
தலைக்கு இன்று
என்ன விலை
ஒருபோதும்
தீராத கவலை
ஏன் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்க்கதி நிலை
இஸ்லாமிய குமரிக்கு
வறுமையும்
விதியும்
பழியல்ல
பண முதலைகளைத் தவிர

சுவர்க்கத்து இளவரசியே
நிச்சயமாய் எம்மை
நீ
மன்னிக்கப் போவதில்லை
இருந்தாலும் தயவுடன்
மன்னிப்பாயா
இம்மையிலும்
மறுமையிலும்
மோசடிக்காரர்களாக இருக்கும்
எம்மை
மன்னித்துக் கொள்

மேலும்
உனக்கு ஒன்று
தெரியுமா தங்கச்சி
அங்கே - உனக்கு மட்டுமே
சிரச்சேதம் செய்தனர்
ஆனால் - இங்கே
ஒட்டுமொத்த
முஸ்லிம்களுக்கும் - ஆட்சியாளர்கள்
மரண தண்டனை
நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்

வலைப்பதிவு
2013.01.09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுமையாக பொழிகிறாள்

பொய் பொழியும்
அவளின்
வானத்தை பார்த்தபடி
எதைப்பற்றி பேசி
என்ன ஆகப்போகிறது

தவறான வழி கிடைத்து
அதில்
சென்று விட்டேன் என்று
பேச முடியாது

மீண்டும் மீண்டும் வருகிறேன்
மீண்டும் செய்ய முடியும் -
இனி முடியாது

என்னிடம்
அவள் அழகாக இருக்கிறாள்
ஒவ்வொரு முறையும்

என்னால்
முடிந்தவரை நேசிக்கிறேன்
அவளை
காயப்படுத்த முடியாது

வழியைக் கண்டுபிடிக்க
முடியவில்லை
என்ன செய்வதென்று
தெரியவில்லை

போய்விட்டாள் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகூட இல்லை
நான் சேதமடைந்திருக்கிறேன்
என்னை பங்கிட்டு
அது என்னை
மிதக்க வைத்திருக்கிறது

அவள் இரவு முழுவதும்
குழந்தையை இறுக்கமாக
முலைக்காம்புடன்
அணைத்து வைத்திருக்கிறாள்

என்னை நானே
கேட்டுக் கொள்கிறேன்

தவற விடுகிறேன்
தவறு விடுகிறேன்

வலைப்பதிவு
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுமில்லை

என்னிடம் பகிர்ந்து கொள்ள
வாழ்க்கை -
நேரம்
மிச்சம் மீதமாக இல்லை
விளங்கிக் கொள்ளுங்கள்

வாழ விருப்பப்பட்டால்
அணைக்க முடிந்தால்
என்னை விடுங்கள்
என் அன்பை
எடுத்துக் கொள்ளுங்கள்
என் நிறங்கள்
காலநிலை மாற்றத்தால்
அவ்வப்போது மாறாது

மிகவும் அதிகமாக
குணமான
உணர்வுகளை மதிக்கிறேன்
பணத்தை பதிலீடாக
கேட்க மாட்டேன்

ஆண்டவனின்
அனைத்தும் அளந்து
கொடுக்கும் நியதி
வீணாக எவரையும்
எதிர்பார்க்கத் தேவையில்லை

நான் பாதை மாறி
பயணம் போக விரும்பவில்லை
மரணத்தை சுமந்து வரும்
வானவர்கள் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றின் வழியில்
விழித்துக்கொண்டிருக்கிறேன்

என்னை பின்பற்றாதீர்கள்
என் பிறப்புறுப்பையாவது
மறைக்க என்னிடம்
எதுவும் இல்லை

எனது இதயவறைகதவு
எந்நேரமும்
திறந்தே கிடக்கிறது
தட்டிக் கொண்டிருக்க வேண்டாம்
சிறிதேனும் நான்
காயப்படுத்த விரும்பவில்லை
இங்கே
எல்லாம் கிடைக்கின்றன
வெளியே
வீணாக நடக்காதே
என் சுவர்களை உடைக்காதே
உங்கள்
அன்பின் வலிமையால்
எனக்கு ஒருபோதும்
தண்டிக்க தெரியாது

உனக்காக
ஒரு நினைவகம்
உயிர்வாழும்
என்னால் இயன்றவரை
நினைவில் கொள்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் இல்லை
நான் உங்களிடம்
எதிர்பார்ப்பது
ஒன்றுமில்லை தான்
இல்லையென்றால்
நானும் பூச்சியம் தான்

வலைப்பூ
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது புனித இரவு

கனவு தான்
எனக்கு பின்னர் தான்
தெரியும் அது
நிஜக்கனவு என்று
வானவர்கள்
என் கண்களைப் பார்த்தபடி
மேகங்களுக்கு மேலே
என்னை
அழைத்துச் செல்கிறார்கள்
சிறுதூரம் அசையாமல்
அவர்களின் இறக்கையில்
அமர்ந்து சென்றேன்
நான் கட்டுப்பாட்டை இழந்து
காற்றில் மிதந்து
காற்றில் கலந்து போகிறேன்
ஆத்மா புகையாக மறைந்தது

உயிருடன் இருப்பது
போதுமானதாகத் தெரியவில்லை
மரணம் -
மர்மப்பொருள் அல்ல
அது
பிரபஞ்சத்தை விடவும்
விசாலமானது

வலைப்பதிவு
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பாதீர்கள்

புணர்ச்சி பற்றிய
உணர்ச்சிகளை நம்பாதே
நண்பா
ஏமாற்றுவதும்
ஏங்குவதும்
பரிசுத்த காதலை அல்ல
உடலுறவை தான்

உண்மையில் நேசிக்கிறார்கள்
என்றால்
ஒவ்வொரு இதயதுடிப்பும்
ஒரு பிரார்த்தனை தான்
சந்திக்கும் போதெல்லாம்
காதல் சரிதங்கள் எழுதப்படும்

அவர்கள் பற்றி
எனக்கு தெரிந்ததை
கேட்டு எழுதினால்
வெட்கப்படுகிறேன்
எதுவும்
பேச முடியாது என்கிறார்கள்

பொய் பொழியும்
உடல் உறுப்புகள்
சுவைப்பதற்கும்
மிகவும் கசப்பானவை

இரகசியமாய்
குலுங்கிக் கொண்டு
மனதுக்குள் அழுகிறார்கள்
மனக் காயங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகிப்போன
காமத்தின் அடிமைகள்

தேவைப்பட்டால்
எப்போதும்
அருகில் இருப்பதை
விரும்புகிறேன் என்பவர்கள்
பாலியல் நோயாளிகள்

எந்த தவறான
செயலும் இல்லை என்று
இறுக்கி அணைப்பவர்களையும்
தொலைபேசியில் மட்டுமே என்று
ஒலியலை
முத்தம் கொடுப்பவர்களையும்
நண்பியே
நம்பி விடாதே

ஆண்கள் மட்டுமல்ல
பெண்களும் கொஞ்சம்
அப்படித்தான்

வலைப்பதிவு
2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பட்டாம்பூச்சி

அவள் ஒளித்து வைத்திருந்த
ஒழுக்கம் கெட்டவனின்
கனவுகளுக்கு
வலுவான நரம்புத்தளர்ச்சி
இரும்பாக இறுகிக் போகும்
பாலியல் உணர்வுகள்

நீ யாரை
மிகவும் ஆழமாக
நேசிக்கிறாய் என்று
கண்டுபிடிக்க முயற்சி செய்கிறேன்

வாழ்க்கையை மாற்றி
விட்டுச் சென்றவளின்
குழந்தைகள்
பட்டாம்பூச்சி பிடித்து
விளையாடுகின்றன
அவள் -
பட்டாம்பூச்சிகள் பாவம் என்று
பிள்ளைகளிடம் சொல்கிறாள்

அச்சங்களின் நரம்பைவிற்று
குருட்டுத் தனமாக
நான் பழகி விட்டேன் என்று
அவள் நினைத்திருக்கக்கூடும்
அதனால்
பாரிசவாதம் பிடித்து
முடங்கிக் கிடக்கிறது
விவாகரத்து
பெற்றவன் மனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமான ஆண்கள்
அசிங்கமான புழுக்கள் என்பது
அவளது எண்ணம்

வலைப்பதிவு
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமற்றவன்

சுவர்க் கண்ணாடி கொண்டு
பார்க்க தேவையற்றது
சுயநலமற்றவனின் தோற்றம்
அதை
அவன் பாதங்களில்
ஒட்டியிருக்கும்
பிறந்த ஊரின் புழுதி மண்ணை
கண்டுபிடிக்க வைத்துக்கொள்

கண்களைத் திறந்துபார்
அவன்
எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவன்

அவனுக்கு
பழக்கப்பட்ட வழக்குகள்
வழங்கப்பட்ட சிறைகள்
எதுவுமில்லை

வழமை போல்
யாவும் கற்பனையே என்று
எழுதி முடிக்க ஊரில்
யாருக்கும் விருப்பமில்லை

வலைப்பூ
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து பயணம்

தவழ்ந்து செல்லும்
செவ்வகம் போன்ற
அந்த
தகரப்பெட்டியைத் தான்
நாட்டு
மக்கள் பயணிக்கும்
பேரூந்து என்கிறார்கள்

முடவன் போல
பொல்லூண்டிப் போகிறது
அலட்சிய அரசு
அங்கவீனமாகக் கிடக்கிறது
சனநெரிசலில்
அது
வட்ட வடிவமாகமாறி
வியர்வை ஒழுக ஒழுக
உயிருடன் உருண்டு செல்கிறது

விழித்திருக்கும் பெண்களின்
விழிகளுக்கு தெரியாமல்
முன்னால் கட்டிப் பிடிக்கவும்
பின்னால் அழுத்தி உரசவும்
ஆட்டம் போடும்
பஸ் வண்டியில் அலைமோதும்
ஆடவர் கூட்டம்
ஆளைப் பார்த்து
ஆழம் பார்த்து
கையை விடுகிறார்கள்

அந்த வண்டியில் செல்லும்
பெண்கள் கட்டாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தடை மாத்திரை
தினமும் தவறாது
விழுங்க வேண்டும்
காற்றில்
இந்திரியத்தை கடத்தும்
வல்லமை படைத்தவர்களும்
நாட்டில்
நிறையப் பேர் உள்ளனர்

இனி
அந்த பஸ்
வேண்டாம் உனக்கு
அந்தப் பாதையும் வேண்டாம்

வலைப்பூ
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரிகள்

அவளிடமிருந்து அழகை
எடுத்துக் கொண்டார்கள்
வெளியில் விழும்
ஒளியில் கிளை பரப்பி
செழித்து வளர
அனுமதி மறுத்தார்கள்

அவளது
ஒழுங்கான நடத்தையை
கழுத்தால் அறுத்தார்கள்

மண் குதிரைகள் வேகமாக
ஆற்றில் ஓடுகின்றன
என்ன தைரியம் கொடுத்தார்கள்

நிலம் தயார்
விதையை புதைத்து வையுங்கள்
இறக்கைகளை விரித்து
பறக்கத் தயாராகுங்கள்
வானமும் தயார்

அவளை
மீண்டும் வழி நடத்துங்கள்

வலைப்பதிவு
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவன்

அவன்
ஒரு கதாநாயகன்
இதயத்தில் குடியிருப்பவன்
பயப்பட வேண்டியதில்லை
வில்லனாக வரமாட்டான்

மக்களின் அழுகைக்கு
துக்கத்திற்கு
அவனிடம் பதில் இருக்கிறது
ஆன்மாவை அரவணைக்கும்
ஆன்மீக தலைவன் அவன்

மன வலிமை தந்து
பயங்களை ஒதுக்கித் தள்ளியவன்
பிழைக்க முடியும் என்று
தைரியம் தந்தவன்

அவநம்பிக்கையை
உணர்த்தாதவன்
நீண்ட சாலையில்
அவனுடன் சென்று
வலுவாக இரு
இறுதியாக நீங்கள்
உண்மையைக் காண்பீர்கள்

அவர்
தலைவர்களின் தலைவன்
யாரும் கையை நீட்ட வேண்டாம்
புகைப்படத்தை கிழித்து
எரிக்க வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தலைவன் எனக்கு
உனது தலைவன் உனக்கு

வலைப்பூ
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊருக்கு ஊர்

பிறப்பு சரியல்லை
சுவாசம் மாசடைந்துள்ளது
ஊரின் உறுப்புகளில்
உள்ளத்தில் குறைபாடு
அந்த ஊர் மண்ணில்
மரணம் ஒன்றும்
சரியாக இருக்காது

அடுத்தவன் ஊர் பற்றிய
பொறாமையில் எரிந்து
உறவுகள் சாம்பலாயின
குள்ளர்களின் அந்த கிராமம்
இருண்டு
இல்லாமல் போனது

நானும் நீயும்
ஒருவருக்கொருவர்
என்ன தீங்கு செய்தோம்
இன்னும் இருக்கின்றோம்

எனது
ஊரின் சொந்த பெயரை மாற்றி
தூற்றாதீர்கள்
என்னை
சொந்தப் பெயரால் கூப்பிடுங்கள்

நீங்கள் எப்போதும் போல
அன்புடன் பேசுங்கள்
தொனியில்
எந்த வித்தியாசமும் காட்டாதீர்கள்
துயரத்தின் வடுக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிவிக்க வேண்டாம்
நாங்கள் எப்போதும்
சிரித்துக் கொண்டே இருப்போம்
பிரார்த்தனை செய்யும் போது
என் பெயர்
எப்பொழுதும் ஞாபகமிருக்கட்டும்

எனது நிழல்
பயங்கர பேய் இல்லை
நான்
எனது ஊரைப்போல
மெய்யானவன்

மீண்டும் சந்திக்கும் போது
எவ்வாறு பிளவுபடுகின்றோம்
என்பதை பேச வேண்டும்
நிறையவே ஊர்களைப் பற்றி
யோசிக்க வேண்டும்
அதற்காக
கால இடைவெளியில் காத்திருக்கிறேன்
எதுவும் இழக்கப்படுவதற்குள்

மிகவும் கடினமாக உள்ளது
இந்த நாட்களில்

கவிதை சொல்லும்
வாழ்க்கையை வாழ வேண்டும்
தோல்விகளால்
என்னை எதிர் கொள்ளாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டையர்கள் என்பதற்காக
இரண்டு அம்மாவும்
இரண்டு அப்பாவும்
இருப்பதில்லை

வலைப்பதிவு
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கவீனச் சமூகம்

மறைதந்த இறை வழிக்கு
சதியும் பழிச் சொல்லும்
கறை பூசும் வேளையிது
நாளையும்
இதுவே தானே
விளையும்

தர்மம் போதிக்கும்
மதத் தலைகள்
நடுவீட்டுக்குள் வந்து
உடன் பிறந்த உறவுகளின்
உயிரை எடுக்கும்
வரைக்குமா
உறங்கிக் கிடக்கிறாய்
உறைக்குள்
இருக்கும் வாளை
ஒருமுறை
சரிபார்த்துக் கொள்
உன்
உதிரம் உறைவதற்குள்

இன்று
ஓடி ஒழித்துத் திரியும்
ஆண்மை அழிந்த
மாப்பிள்ளை மாரை
தேர்தல்
திருமண தினத்தில்
சந்தித்து
ஓட்டுக்கு பதிலாக
ஓட்ட நறுக்குவோம்
நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரென்று
காட்டுவோம்
நாம்
நாதி இழந்து
வீதி வீதியாய்
அலைந்து திரிந்தாலும்
நமது அடகுத் தொழிலாளர்
கூட்டத்தை விட்டுவிடாது
சுட்டுப் பொசுக்குவோம்
பொறுத்திரு

ஈழத் தமிழர்களை
மட்டுமல்ல -
முஸ்லிம்களையும்
இனி ஆண்டவன் தான்
காப்பாற்ற வேண்டும்
முடிந்தால் - குறித்து வை
மறக்காமல்
ஞாபகமும் வைத்துக்கொள்

வலைப்பூ
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதி

இனவாதத்தை
தேடியலையும் தேரர்கள்
அதற்காக போராடி
சண்டை போடும்
பின்னர்
சண்டையிட்டு மரணிப்பவர்
எமது
மார்க்கத்தில் இல்லை

அவர்கள்
எம்மை சாராதவர்கள்
இப்படிக்கு
தூய இஸ்லாம்

வலைப்பூ
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேத பரிசோதனைகள்

மக்கள் விரும்பும்
நாட்டின் அதிசிறந்த
றக்பி வீரனாக
நீ இருக்கலாம்
இருப்பினும்
அரச குடும்பத்தின்
பிள்ளைகள் மட்டும் ஏன்
உன் திறமைகளை
வெறுத்தார்கள்

வஸீமே!
கொன்றவர்களுக்கு தானே தெரியும்
மரணத்தின் காரணமும்
மரண சான்றிதழின்
பெறுமதியும்

முஸ்லிம்கள் பொறுமைசாலிகள்
பல பக்கமும்
அடி வாங்கும் அப்பாவிகள்
அடிமைத்தனத்தில்
அசையாத பலசாலிகள்
அரசியல் அநாதைகள்

அறுத்துப் போட்டாலும்
தொழுகையில்
இரு கரமேந்தி
எதிரிடமிருந்து
பாதுகாப்பு தேடுபவர்கள்
ஒருபோதும் அவர்கள்
திரும்பி அடிக்காதாதவர்கள்
என்பதை கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராஜகக்காரர்கள்
அறிந்து வைத்துள்ளனர்

அவர்களின் விருப்பப்படி
பிரேத பரிசோதனை
அறிக்கைகள் எழுத
வைத்தியர்களை வாடகைக்கு
வைத்துக் கொண்டு தான்
கொலை புரிகின்றனர்
இதை எழுதுவதற்காக மானங்கெட்ட
மருத்துவர்கள்
வெட்கப்படத் தேவையில்லை

வஸீம் தாஜுத்தீனே!
உனக்கு
அன்று நடந்தவை
இப்போது
முழு சமூகத்தின் மீதும்
நடக்கிறது!

வலைப்பூ
2012.05.17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கிலங்கை கல்முனை மாநகரில் பிறந்தவர். தற்போது கொழும்பு தெஹிவளை, களுபோவிலையில் வசித்து வருகிறார். MBBS மருத்துவர். பட்டப்பின்படிப்பு விஞ்ஞான முதுமானியும் கூட. சுகாதார அமைச்சின் கீழ் வைத்திய அத்தியட்சகராக பணி புரிந்தவர்.
கவிதை மூலம் அறியப்பட்ட ஒரு படைப்பாளி. வீரியமான கவிதைகளுடன் சிறுகதைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரை இலக்கியம் என்பவற்றையும் எழுதி வருகிறார். அத்துடன் சிறந்த சமூக ஆய்வாளருமாவார்.

இவரது இலக்கிய பணிக்காக உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய பொன் விழா மாநாட்டில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

drazaath@blogspot.com

ISBN : 978-955-54758-1-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org